# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ருகூஅகூ<br>விளம்பி, வைகாசி | மலர் |
|---|---|---|
| ௩௪ | 1958 மே, ஜூன். | ௨ |


## வண்மையும் வாழ்த்தும்.

தமிழகத்தில் இஞ்ஞான்று வளர்ந்து பெருகி மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து களிப்பூட்டிவரும் திரைப்படக் கலையுலகில் தனது தாளாண்மையால் விரைந்து முன்னேறி, உயர்ந்த படங்களை வெளியிட்டுவரும் அருணசலம் திரைப்பட வெளியீட்டுரிமையாளரும் இயக்குநருமான திருவாளர் A. K. வேலன் (அ. குழந்தைவேலன்) அவர்களை இன்றைய கலையுலகம் நன்கறியும். இயற்றமிழ்க் கல்வியும் நாடகப் புலமையும் அரசியலறிவும் சொல்வன்மையும் எழுத்தாற்றலும் சான்ற இவர் நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகத் தொண்டாற்றியவர். தன்முயற்சியால் தமிழ் பயின்று தமிழாசிரியராகப் பணிபுரிந்தும், தமிழகமும் தமிழ் மொழியும் நலமுற்று வளம் பெறற்கான சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த செந்தமிழிதழ்கள் நடத்தியும், சிறந்த பல முற்போக்கு நாடகங்களை எழுதி வெளியிட்டும், தக்க நடிகர்களைக்கொண்டு சிறந்த நாடகங்களை நடத்தியும் இலக்கிய—அரசியற் சொற்பொழிவாற்றியும் பணிபுரிந்த பண்பட்ட தமிழ்மகனுவார்.

நயனொடு நன்றிபுரிந்த பயனுடைப் பண்பினராதலின் இயற்கையாக அமைந்த நுண்ணறிவான் அயராது உழைத்துத் தாளாற்றித் தந்த பொருளைத் தக்க முறையில் வேளாண்மை செய்யும் உளத்தினராய்த் தாம் முன்னுள் செயலாற்றிய தமிழ்ச் சங்க வளர்ச்சிக்கோர் சீரிய கொடைதருவான் எண்ணித் தாமே முன்போந்து உசாவிய தகவுகண்டு சங்கம் தவநனிமகிழ்ந்து தான் நடத்திவரும் இராதாகிருட்டின தொடக்கப் பள்ளிக் கட்டிடத்திற்கு ஓரளவு தொகையை விரும்பி நின்றது.

தம்முடைய 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற திரைப்படத்திற் கலந்து உருவாக்கிய கலைஞர்களைப் பாராட்டுமுகத்தான் சென்னை மாநிலக் கல்வியமைச்சர் திருவாளர் C. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த விழாவின்போது, நமது சங்க அமைச்சர் அவர்களை அழைத்துத் தொடக்கப் பள்ளிக் கட்டிடத்தைத் தாமே கட்டித் தருவதாகப் புகன்றமை கேட்டு யாவரும் மகிழ்ந்து போற்றினர். தமிழகம் அவர் தகவு நினைந்து புகழ்ந்தது.

# ‘மருதந்துறை’ என்பதன் மரூஉ மதுரை.

Prof. அ. கிருட்டினமூர்த்தி, M. A., B. L.,
மாஸ்கோ.

*

பாண்டியன் தலைநகருக்கு மதுரை, கூடல் என்ற இருபெயர்கள் சங்க நூல்கள், ஏனை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் முதலியவற்றிலும் பிறவிடங்களிலும் இன்றுவரை வழங்கி வந்திருக்கின்றன.

இவற்றுக்கு அமைந்த பெயர்க் காரணங்கள், ஒவ்வொரு விதமாகப் பன்னாட்களாக என் சிந்தனையிற் பட்டுப்பட்டு மறைந்தன, இவற்றை ஒழுங்குறுத்தி எழுதுவது பயன்படுவதே எனக்கருதி, இக்கட்டுரையை எழுதலானேன். தமிழாராயும் அன்பர்கள் இவற்றை மேலும் திருத்திக் கூறக்கூடுமாயின், மிக்க நன்றியுடையவனாவேன்.

“ஊரும் பேரும்” என்ற நூலில் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் இவ்வூர்ப் பெயர்களை ஆய்ந்திருக்கிறார்களா? எவ்வாறு ஆய்ந்து கூறியுள்ளார்? என்பனவற்றையறிய இங்கு மாஸ்கோவில் வசதியில்லை. அந்நூலில் ஏதும் ஆய்ந்து கூறியிருக்கக்கூடும் என நான் எதிர்பார்ப்பது மிகையன்று. பாண்டி நாட்டிலும், மதுரையிலும் இதுகாறும் பெருகிவந்துள்ள அறிஞர் மரபினர்

---

33-ம் பக்கத் தொடர்ச்சி.

திரு. வேலன் அவர்கள் 3—5—58ல் கட்டிடத்திற்குரிய இடத்தைப் பார்வையிடச் சங்கத்திற்குப் போந்தகாலை சங்கத்தார் அவரை அன்புடன் வரவேற்று நண்பர்கள் சூழ ஒரு தேநீர் விருந்திட்டு அவர்தம் சீரிய பண்புநலங்களைப் பாராட்டி மகிழ்ந்தனர். பாராட்டுக்கு நன்றி தெரிவிக்குங்கால் தமிழ்ப் புலவர்கள் மன்னர்களையும் வள்ளல்களையும் அடுத்து வாழ்வு பெற்றும், பெற்ற பெருவளன் பெறார்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொல்லியும் வந்த மரபு மாறுங்காலம் வந்துளதென்றும், அதற்குத் தாமே சான்றாக முன்வரும் வாய்ப்பு நேர்ந்தமைக்குப் பெரிதும் மகிழ்வதாகவும், ‘உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை’ என்ற வாய்மொழியைத் தாமே கண்டு வருவதாகவும் கூறிக் கட்டிடப் பணியை இன்னே தொடங்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

சங்கத் தலைவரும் அமைச்சரும் ஏனைய உறுப்பினர்களும் தமிழ்ப் பேரன்பர்களும் அறிஞர்களும் அவர்தம் எளிமையையும் இனிய பண்புகளையும் பாராட்டி மேலும் மேலும் ஊக்கமும் ஆக்கமும் பெற்று அறச் செயல் புரிந்து நீடுவாழ அவரை வாழ்த்தினர்.

அன்னாருக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த பாராட்டும் வாழ்த்தும் உரியவாகுக.

பொழிற்றொண்டர்.

இப்பெயர்கள்பற்றி முன்னேயே யாதேனும் ஆய்ந்துகூறியிருப்பின், மிக நன்று. அவ்வாறே ஆங்கெல்லாம் கூறப்பட்டவையுளவேல், அவற்ரோடு இக்கட்டுரைக் கருத்துக்களையும் சேர்த்துச் சிந்திக்கவும் பெருக்கவும் வேண்டுகின்றேன்.

இருபதாண்டுகட்கு முன்பு ஐயாற்று அரசர் கல்லூரியில் நான் தமிழ் பயின்றபோது, பரிபாடல் 7-ஆம் பாடலில்,

"திருமருத முன்றுறை சேர்புனற்கண் துய்ப்பார்
தாமந் தலைபுனை பேஎநீர் வையை"

என்ற அடிகளிலும் அவற்றின் உரையிலும், "திருமருத முன்றுறை" என்ற வையைத்துறைப் பெயரைப் படித்தபோது, சிந்தையிற் சில கருத்துக்கள் நிழலிட்டன. அவற்றின் பிந்திய வளர்ச்சியே இக் கட்டுரைப் பகுதி.

சில ஆண்டுகட்கு முன்பு, மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்—தமிழகத்தின் சிறந்த ஓர் ஆராய்ச்சியாளர்—"செந்தமிழ்ச் செல்வி"யில் புகார் நகர்பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தார்கள். அதனைப் படித்ததிலிருந்து தோன்றிய கருத்து வளர்ச்சியே இக்கட்டுரைப் பகுதி.

பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடற் புராணத்தை மதுரை, கூடல், ஆலவாய் என்ற அந்நகர்க்குரிய முப்பெயர்களால் காண்டம் வகுத்து அமைத்திருக்கிறர். இம் மூன்றிற்கும் அவர், புராணிக நெறியில் ஒவ்வொரு காரணக் குறிப்புத்தந்து, அக் கதைக் குறிப்புக்களைச் சிவபிரானின் திருவிளையாடலாகக் காட்டியிருக்கிறர்.

புராணிக நெறியிற் கூறப்படுவன, குறிப்பாகத் தல புராணங்கள் தரும் செய்திகள் பெரும்பாலவை, வரலாற்றை விளக்கப் பயன்படுவனவல்ல. திருவிளையாடற் புராணம் இக் குறைக்கு உட்பட்டதேயாகும்.

மதுரை, கூடல் என்ற இரு பெயர்களில், மதுரை என்னும் பெயரே பழம் பெயர். கூடல் என்பது, பிறகு ஏற்பட்ட பெயராதல் வேண்டும். எனவே, மதுரையைப்பற்றி முதலில் கருதுதும்.

## மதுரை.

மதுரையைப்பற்றிப் பரஞ்சோதியார் கூறும் கதைக்குறிப்பு :— பாண்டியன் முதற்கண் மணவூரைத் தலைநகராகக்கொண்டு, ஆண்டனன். அதனருகே கடம்பவன மொன்றில், சிவபிரான் கோயில் கொண்டு தேவர்க்கு அருள்செய்தலை வணிகன் ஒருவன் வாயிலாக அறிந்த பாண்டியன், சிவபிரானை அணுகி, அருள்வேண்டி, அக் கடம்பவனத்தை யழித்து, நகரெடுத்து அதனைப் புதுத் தலைநகராக்கியபோது, அமுதத்தைப் பெய்து அந்நகரைச் சாந்தி செய்தனன். அவ்வமுதம் மதுரமுடையதாதலின், அந்நகருக்கு மதுரை எனப் பெயரிட்டனன் என்பது.

பாண்டியன் தலைநகரான மதுரையின் பெயர்க் காரணத்தை விளக்க இக் கதைக் குறிப்பு வரலாற்று நெறியில் ஏற்றுக்கொள்ளத் தகுவதன்று. காரணம், விளக்காமலே விளங்கவல்லது.

தமிழகத்தின் முடிவேந்தர் தலைநகரங்கள், காவிரி, வையை பொருநை யாற்றங்கரைகளில் பெருகி வளர்ந்தன. இவ்வாறே உலகத்தின் பல பழம்பெரும் அரசுகள்தாமும், ஆற்றங்கரை, கடற்கரைகளில் பெருகிச் செழித்திருக்கின்றன.

"திருமருத முன்றுறை சேர்புனற்கண் துய்ப்பார்
தாமந் தலைபுனை பேஎநீர் வையை"

என்ற அடிகளில் வரும் "மருத முன்றுறை" என்ற சொற்புணர்ப்பே மதுரை என்னும் பெயர்த்தோற்றத்தின் நிலைக்களம்.

[ஒரு சிலர்க்கு இங்கு ஏற்படக்கூடிய ஒரு திரிபுணர்ச்சியை முதற்கண் தெளிவுறுத்துதல் வேண்டும். "மருதமுன்றுறை" என்ற பெயர்வழக்குக்குப் பரிபாடல் அடிகளை ஒரு மேற்கோளாகக் காட்டிய மாத்திரையன்றிப் பரிபாடல் வாசகந்தான் பிறகு மதுரையாகத் திரிந்தது எனப் பிறழக் கருதலாகாது. "மருதந்துறை" என்ற பெயர் வழக்கும், அது திரிந்து, பிறகு மதுரையானதும் சங்க காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முற்பட்டனவாதல் வேண்டும்]

நிற்க, "மருத முன்றுறை" என்ற வழக்கு, பின்வரும் அடிகளில் மேலும் பரக்க வழங்குவது காண்க.

"பெரிய திருமருத நீர்ப் பூந்துறை" (பரிபா—7:83)

"தீம்புனல் வையைத் திருமருத முன்றுறை" (பரிபா - 22:45)

"திருமருத முன்றுறை முற்றங் குறுகித்
தெரி மருதம் பாடுப" (ச. இலக். சமாசம்: 2358-72,73)

"வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை"
விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை"
(சிலப். ஊர்காண். 72-73)

இவ்வடிகளிற்கண்ட "மருத முன்றுறை" என்ற பெயர் வழக்கு, அவற்றின் பன்னெடுங் காலத்திற்கு முன்பே 'மதுரை' எனத்திரிந்திருத்தல் கூடும். இம் முடிபிற்கான காரணங்கள் வருமாறு:—

(1) பொழிலடர்ந்த பல தனித்தனிப் பகுதிகள் சேர்ந்தே 'மதுரை' என்ற நகர் பிறகு பெருகியிருத்தல் வேண்டும். மருத மரங்கள் ஓங்கிய வையை யாற்றின் கண்ணதாகிய பகுதி மருதந்துறை எனப்பட்டது. இவ்வாறே கடம்ப மரங்கள் ஆர்ந்த கடம்பவனம் என்ற பகுதி காடு என்ற நிலைமாறிப் பிறகு ஊர்மருங்காயிருத்தல் வேண்டும். இவ்வாறு சேர்ந்த ஏனைய பல பகுதிகளும் கூடிய பெரும் பரப்புத்தான், பின்னர் ஒரே நகராக மதுரை என்னும் பெய

ரால் வழங்கியதாதல் வேண்டும். மக்கள்வாழ் ஊர்மருங்குகள் முதற் கண் காடும் பொழிலுமாக இருந்து பிறகு காடு கெடுத்து நகரங் காணும் பண்டை மரபுக்கு இது பொருந்துவதேயாகும்.

(2) மருதமரத்தின் பெயரால் இடப்பெயர்களும் மக்கட் பெயர் களும் தமிழகத்தில் பண்டுதொட்டுப் பெருக வழங்குவது வெளிப் படை. மருதூர், மருதாநல்லூர், மருதையாறு, இடைமருதூர், மருதி, கொடும்புறமருதி, மாங்குடி மருதன் முதலாகப் பல பெயர்களையும் கருதுக. (மருதமுத்து என்பதை ஈண்டுக் கருதலாகாது; காரணம் மதுரையாற் சிறப்பெய்திய "மதுரைமுத்து" என்பதன் திரிபில் விளைந்தது "மருதமுத்து" என்பது. அதாவது, குதிரை குருதை யாவதுபோல. எனவே, அதனை ஈண்டுக் கருதற்க என்பது.) இவ் வாறு மருதப் பூம்பொழில் அடர்ந்த வையை யாற்றின் நீர்த்துறை யில் எழுந்த சிறுநகர் மருதந்துறை என வழங்கிப் பிறகுக் காலவழக் கில் 'மதுரை' யாயிற்று.

(3) 'திருமருத முன்றுறை' என்ற வழக்கில் திரு என்பது ஒரு மங்கல மொழி. அது நீங்க, எஞ்சிய 'மருதமுன்றுறை' என்பது மருதந்துறை எனவும் வழங்கப்பெற்றுள்ளது. 'மருதந்துறை' மதுரை என மருவுவது மிக எளிதில் நிகழக்கூடிய ஒரு திரிபு. இத் திரிபு, சங்க காலத்துக்குப் பன்னெடுங்காலம் முன்பே நிகழ்ந்து முடிந்திருத்தல் வேண்டும்.

(4) மதுரைமாநகர் ஓங்கிச் சிறந்த அம்மருங்கிலுள்ள வையை யாற்றின் பொழிலகத்தைக் கூறும்போதெல்லாம் புலவர் பலரும் ஏனை மரங்களை ஒழித்து, அவற்றினுங்காட்டில், மருத மரங்களின் எழில், மருதந்துறை, மருதப்பண் முதலியவற்றைச் சிறப்புறப் பாடியுள்ள மரபு, அவற்றின் பொருட்கட்டு ஆகியவற்றை முன்னர்க் காட்டிய பரிபாடல், சிலப்பதிகார அடிகளிற் காண்க.

(5) மருதம் ஆர்ந்த அந்த நீர்த்துறைப் பகுதி, இத்துணைய சிறப்பெய்தக் காரணம் வருமாறு:—

தமிழகத்தின் எல்லாத் திணையிலும் வாழ்ந்த மாந்தர், அந்தந்த நிலத்து நீர்மருங்குகளில் செய்யும் புனல் விளையாட்டு தனித்த இன் பச் சிறப்புடையது. பண்டைத் தமிழக மாந்தர்க்கு, ஆடவர் மகளிர் அனைவர்க்கும், அஃதோர் பொழுதயர் இன்பம். இழுமென இழிதரும் அருவியில் ஆரும் அருமையை புனல் தரு புணர்ச்சி என்ற குறிஞ்சித் துறையைக் கருதுக. மடலவிழ் கானல் கடல்விளையாட்டைக் கருதுக. யாறும் பொய்கையும் காவும் குளனும் ஆடும் பழந்தமிழ் வழக்கை எண்ணுக 'பூம்பொழில் நுகர்தல் புனல்விளையாடல்' என்ற பெருங் காப்பிய உறுப்பும், நாட்டுப் படலத்தின் ஆறுகளும் ஆற்றுப்படலமும் புனையப்படுமாறு காண்க. மார்கழிநீர் ஆடுதலை நினைமின். புனிறயர் மகளிர் குளனுடைரவமுங் கேண்மின். கோயில்தொறும் தெப்பத் திரு விழாக் காண்மின். காவிரி, பொருநையாறுகளின் கழைமாய் நீத்

தத்தில் வேழ வெண்புனே தழீஇக் காதலர் ஆடுவதைக் கருதுக. நீர் மாடங்களில் அவர்கள் மெல்லென இயலுவது காண்க. திருப்பரங் குன்றத்துப் புதுப்புனலில் காதலஞ் செல்வர் செய்யும் இன்ப நிகழ்ச்சி களை எண்ணுக.

"உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி,
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றது பூம்புனல் யாறென"

(சிலப்: புறஞ்சேரி - 168-174)

அவ் வையை யாறு பேசப்படுமாறு காண்க.

"பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்
அரிமுக அம்பியும் அருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கின்"

வையைக் கருதுக. (ஷை 176 - 178)

அவ்வையையைப் பற்றிய பரிபாடல் பலவற்றில் ஆடவரும் மகளிரும் அவ்வையை யாற்றுப் புனலில் ஆராத இன்பத்தில் ஆடித் திளைப்பது காண்க.

சங்க காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பே, குன்றவர் அருவியாடலும், கானவர் சுனைநீராடலும், பரதவர் கடல் விளையா டலும்போல, ஊரவர் நாட்டவர் யாற்றுத்துறை மருங்கில் பூம்புனல் ஆடுதல் பழம்பெரும் மரபு. பூம்புனலாடிப் பூம்பொழிலயர்தலும் மரபு. வையையின் நீர்த்துறையையும் மருதப் பூம்பொழிலையும் கருதுக. இம் மாந்தர் அனைவரும் தத்தம் நிலங்களில் உள்ள நீர்த் துறைகளில் விழாக்கள் எடுப்பதும் மரபு. எடுத்துக்கூறிய அந்தப் புனலாடும் மரபுகளே, அம்மரபுகளின் தொடர்ச்சியே, பரிபாடல், சிலப்பதிகாரம், பிறபிற சங்க நூல்கள், ஆகியவற்றிலும் பாடப்பெற் றன என்று உணர்தல் வேண்டும்.

இவ்வாறெல்லாம், பூம்புனல்வளம், புனல்விளையாட்டு, மருதப் பூம்பொழில் ஆகிய இன்ப நலங்கள் மலிந்த ஒரு நீர்ப்பெருந்துறை யாக, மருதந்துறை என வழங்கி, அவ் வையைப் பெருந்துறை, பின்னர்ப் பேரூராகத் தலைநகராக மாறிற்று எனக்கொள்வது வளர்ச்சி முறைக்கும் பொருந்துவதாகும்.

இக்கூறிய காரணங்களால் "மருத முன்றுறை", மருதந்துறை, மதுரை என மருவிற்று எனக்கொள்ளல் பெரிதும் பொருத்தமுடைத் தாதல் காண்க.

இனி, இம் முடிபுக்கு வருவதால், இலக்கியக் குறிப்புக்கள் சில இதனுடன் மோதலுறுவதைக் கருதுதல் வேண்டும்.

கண்ணன் ஆடிய வடமதுரையோடு, நம் மதுரையையும் சேர்த்து நினைப்போர் சிலர். அதாவது முன்னது வடமதுரை என்றும் பின்னது தென்மதுரை என்றும் கருதுவர். அவ் வடமதுரை இன்று டெல்லிக்குச் செல்லும் இருப்புப் பாதையில் ஆக்ரா—பிருந்தாவன் என்ற இருபெருநிலையங்களுக்கிடையில் இருப்பது. மதுரா என்ற அம் மதுரையின் பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பது தெரியாது. இன்றைய தமிழ்ப் பெயர்க்கும் அதற்கும் ஒலியொப்புமை யன்றி வேறு எத்திறத்தில் ஒப்புமை என்பதற்குச் சான்று காட்டி நிறுவுதல் இயலாது.

புராணக் குறிப்பின்படி, கண்ணன் பிறப்பதற்கு முன்பே, வடதிசை மதுரை இருந்திருக்கிறது; பின்னர்க் கண்ணன் பிறந்து, அவன் விளையாடல்கள் சிறப்பெய்துவது ஒருநிலை—பிறகு அவ்விளையாடல்களால் கண்ணனைத் திருமாலின் பிறவியாகக் கொண்டாடுவது அடுத்த நிலை. இச்சிறப்புக்கள் நிரம்பியமைபற்றி அம் மதுரையின் பெயரால், பாண்டியன் தலைநகருக்கு 'மதுரை' என்று பெயராகி, வடமதுரையோடு இனஞ்சுட்டித் தென்மதுரை என்று பிறகு வழங்கிற்று என்பது முற்கூறியவற்றால் ஏற்படுகிறது.

இதற்கு நேர் முரண்பட்டுப் பின்வரும் இன்னொரு இலக்கியக் குறிப்பு அமைந்திருப்பதைக் காண்மின் :

முதற்கடற்கோள் ஏற்படும் முன்பு, குமரிக் கண்டத்தில் இருந்த பாண்டியன் தலைநகர் தென்மதுரை. முதற் கடற்கோள் நிகழ்ந்த பின் ஏற்பட்ட தலைநகர் கபாடபுரம். இரண்டாம் கடற்கோளில் இதுவும் அழியப் பிறகு தோற்றுவிக்கப்பட்டது நம் வையை யாற்று மதுரை. இது கடல்கொண்ட தென்மதுரையோடு இனஞ் சுட்டினால் 'வடமதுரை' யாகும்.

அன்றேல், கண்ணன் விளையாடியது வடமதுரை, கடல்கொண்டது தென்மதுரை, இடையில் உள்ள நம் மதுரை பொதுப்பட 'மதுரை' என்றுதல் வேண்டும்.

இக்கூற்றுக்களின் தனித்தனி நிலையை ஆராய்வோம் :—

1. கடல்கொண்ட பாண்டியர் தலைநகர்க்கு உண்மையிலேயே மதுரை என்ற பெயர் இருந்திருப்பின், வடதிசையில் உள்ள கண்ணனின் மதுரையோடு இனஞ்சுட்டித் தென்மதுரையாக முடியாது. காரணம், கண்ணனின் காலத்தைவிட, கண்ணன் விளையாடிய மதுரையின் காலத்தை விடக், கடல்கொண்ட மதுரையின் காலம் வரலாற்று நெறியில் மிகவும் தொன்மையுடையது. எனவே, அதனோடு இனஞ்சுட்டிக் கடல்கொண்ட மதுரை தென் மதுரையாக முடியாது. எனவே 'மதுரை' என்ற பெயரமைப்பை வடநாட்டு மதுரையைக் கொண்டு விளக்க இயலாது.

2. கண்ணன் விளையாண்ட பிருந்தாவனம், ஆடிய யமுனை நதி, ஆண்ட துவாரகை நகர் இவற்றை விட்டிட்டு, மதுரா ஒன்றையே பெரிதாக எண்ணி அதன் சிறப்பால், தென்றிசை நகருக்குப் பெயரமைப்பதென்பது சிந்தனைக்குப் பொருந்துவதன்று.

3. கண்ணனின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, சிறப்பு யாவும் ஏற்பட்டது வடநாட்டில். திருமால், மாயோன் என்ற வணக்க வழிபாடுகள் தமிழ் மரபு. ஆரியர் விஷ்ணு என்றால் முதலிற் சூரியனையே குறித்தனர்; திருமாலை, மாயோனை அவர்கள் அறியார். விஷ்ணு திருமால், மாயோன் இவர்கள் யாவரும் ஒருவராகவே கொள்ளப்பட்டது இருவர் வழிபாடுகளும் கலப்பெய்திய ஒரு கால நிலையில்தான். இதனை விளக்கப்புகின், இந்தியத் தெய்வங்களின் உறவுமுறை ஒன்றோடொன்று ஒவ்வோர் உறவுநெறியில் கலத்து வளர்ந்து, அவ்வடிப்படையில் கதைகள் விளைந்த முறைகளையும் காட்டவேண்டும். அதாவது இன்றைய இந்தியத் தெய்வங்களின் குடும்ப உறவுமுறை வளர்ந்த விதத்தை விளக்கவேண்டும். அது இங்கு வேண்டப்படாத ஒரு செயல். கண்ணனைத் தமிழ்நாட்டார் ஏற்று வணங்கிய காலம் தமிழரின் தொன்மை வரலாற்றில் மிகப் பிந்தியது. வையை யாற்று மருதமுன்றுறை நகரோடு இதனைச் சேர்த்துக் குழப்பவேண்டுவதில்லை.

4. வடநாட்டுக் கண்ணனைக் குறித்த வழக்குகளுக்கும் தமிழ் நாட்டில் கண்ணனைக் குறித்த வழக்குகளுக்கும் சில பல வேறுபாடுகள் உண்டு. இவற்றைத் திரு. மு. இராகவையங்கார் இயற்றிய "ஆராய்ச்சித் தொகுதி"யில் "கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குகள்" என்ற கட்டுரையில் காண்க. இவ் வேறுபாடுகளை இராமாயணக் கதை ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொருவிதமாக வழங்குவதைப் போலவே கொள்ளவேண்டும். இவ்வாறு ஏற்பட்ட புராணிக நெறியில்தான், வடநாட்டு மதுரையோடு சேர்த்துத் தமிழ்நாட்டு மதுரைக்குக் காரணம் கற்பித்தனர் எனக் கருதல் வேண்டும். இதே நெறியில் தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களை வடநாட்டுக் கதைகளோடு பிணைத்துச் சிறிதும் அறிவுப் பொருத்தம் இன்றிப் பொய்ப் புனைவுகளாகப் புனைந்துவிட்ட கட்டுக்கதைகள் எண்ணித் தொலைவனவல்ல. இதனை இன்றைய தமிழகம் ஐயமற அறியும்.

5. தமிழகத்தின் தென்றிசைப் பரப்பைக் கடல்கொண்டது உண்மை. யாறும், குன்றும், மக்களும் நாடும் அழிந்தமை உண்மை. பல கடல்கோள்கள் நிகழ்ந்ததும் உண்மை. அரசுகள் நிலைபெயர்ந்தது உண்மை. வடக்கில் ஏறிப் புதுநகர் கண்டது உண்மை. ஆயினும், முதற் கடல்கோளுக்கு முன்பு, பாண்டியன் தலைநகர்க்குப் பெயர் மதுரைதான் என்பதற்குச் சான்று, இறையனார் அகப்பொருள் குறிப்பு ஒன்றைத் தவிர, வேறு எதுவும் இன்று. குமரிக்கண்டம் முழுகிய செய்திகளை நிறுவ, இறையனார் அகப்பொருட் குறிப்புக்கள் அவ்வளவாக இன்று வேண்டப்படுவன அல்ல. அக் குறிப்புக்கள் இல்லாமலே அக் கடல்கோள்களை நிறுவ இன்று நிரம்பிய சான்றுகள்

உள. அக் குறிப்புக்களிற் கண்ட பெரும்படியான செய்திகள்தாம் உண்மையே தவிர குறிப்பிற்கண்ட விவரம் ஒவ்வொன்றும் உண்மை என்று கொள்ளமுடியாது. இந்நிலைக்கு வரலாற்றுக் காரணம் பல. இந்நெறியில் குமரிக்கண்டத்துப் பாண்டியனின் தலைநகர் "மதுரை" என்னும் பெயரது என்பதை யான் உடன்பட இயலாமைக்கு வருந்துகிறேன். எனவே, அந்தக் கற்பனை மதுரையைக் கொண்டு தான் இன்றைய மதுரைக்குப் பெயரமைந்தது என்பதை ஏற்க வியலாது.

முடிபு :— வரலாற்றுப் புகழ், வெற்றிச் சிறப்புகள், முடிமன்னர்கள், தமிழ்ச் சங்கங்கள், செங்கோன்மை, கலைவளம், இலக்கியப் பெருக்கம், சமயச் சிறப்பு, வாணிகம், செல்வச் செழிப்பு, உலக வாணிகம் முதலிய பலப்பல காரணங்களில், பாண்டியனின் வையை யாற்று மதுரை எங்கும் மிக்குப் புகழ் எய்திய பெரும் பெயர் மதுரை ஆக ஆயிற்று. அந்நிலைதான், அந்நகரின் பெயர்க்காரணத்தை வடநாட்டுக் கண்ணனின் மதுரையோடும், குமரிக்கண்டத்துப் பாண்டியன் தலைநகரோடும், பரஞ்சோதியார் கூற்றுப்படி அமுதம் பெய்து மதுரமேறியதால் மதுரையென்றாயிற்று என்ற தெய்விகத் தோடும் பலப்பலவாறு ஒவ்வொரு வகையிலும் கூட்டிப் பெருக்கிப் புனைந்துரைக்கக் காரணமாயிற்று. வேறு விதமாகக் கூறின், வையை யாற்று மதுரை, மற்ற மதுரைகளைப் பற்றிய கற்பனைகளுக்கு நிலைக் களனாயிற்று என்பதே உண்மை.

எனவே, மருதமுன்றுறை-மருதந்துறை-மதுரை என்ற மரூஉ முறைதான் இன்றைய 'மதுரை' என்ற பெயரமைதியின் வளர்ச்சி மரபு என்பது முடிபாகிறது.

"திருமருதநீர்ப்பூந்துறை" என்றாற்போல, விளங்கி ஒரு நீர்த் துறைச் சிறுநகர், பின்னர் தலைநகராகி, மதில்கள் எடுத்து மாடங்கள் ஓங்கிய நிலையில்,

"வந்து மதுரை மதில்பொருஉம் வான்மலர்த்தாஅய்
அந்தண் புனல்வையை யாறு"

"ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவன்"

"மாட மதுரையும் பீடார் உறந்தையும்"

எனவும் பிறவாறும் பாடல்பயின்றது என்க.

'கூடல்' என்ற பெயரமைதியை அடுத்த கட்டுரையிற் காண்போமாக.

---

# தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

பரிசாரகர் என்பார் ஏவற்றெழில் அல்லது சமையற்றெழில் செய்வோராவர். இங்கு ஏவற்றெழிலுக்கு உரியவர் (Temple Servants) என்பது டாக்டர். உல்ஷ் துரைமகனுரின் கருத்தாகும். இத்தொழிலுக்கு நியமிக்கப் பெற்றவர் மாணிகள் ஆவர். (மாணிகள்—பிரமசாரிகள்.) முதலாம் இராசராச சோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர்

(1) அருமொழி தேவ வளநாட்டு, நென்மலி நாட்டு, நெடுமணலாகிய மதன மஞ்சரி சதுர்வேதி மங்கலம், குன்றியூர், சுருன்குடி, ஆற்றூர், ஷை வளநாட்டுப் புறங்கரம்பை நாட்டுப் பல்லவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம், செம்பியன்மாதேவி சதுர்வேதி மங்கலம், பெரும்பலமருதூர், களப்பாழ், சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலம், அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம், கெழுவத்தூர், கோயிலூர் புதுக்குடியாகிய கோதண்டராம சதுர்வேதி மங்கலம், வங்கநகர், கொற்றவன்குடி, பனையூர், ஷை வளநாட்டு, வெண்டாழை வேளூர்க் கூற்றத்து, குறும்பலூர், கொண்ணூர், ஆர்வலக் கூற்றத்து ஆர்வலம், வலிவலம், மாலினூர், அறிஞ்சிகை சதுர்வேதிமங்கலம், ஷை வளநாட்டுப் புலியூர் நாட்டு...... (ஊரின் பெயர் சிதைந்துவிட்டது);

(2) க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுக் குடவாயில், நாலூர், மருகல், தானத்தொங்கல் சதுர்வேதிமங்கலம், ஷை வளநாட்டு முழையூர் நாட்டுக் குந்தவை சதுர்வேதிமங்கலம்;

(3) உய்யக்கொண்டார் வளநாட்டுத் தண்டத் தோட்டமான மும்மடி சோழ சதுர்வேதிமங்கலம்; ஷை வளநாட்டுப் பாம்புர நாட்டுத் திருக்குடமூக்கில்; ஷை வளநாட்டு, அம்பர் நாட்டு, அம்புறத்தூர், அவ்வை நல்லூர்; ஷை வளநாட்டு வெண்ணுட்டுத் திருமழலை, கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம் வைகலாகிய வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டுத் திரைமூர் நாட்டு... (ஊரின் பெயர் சிதைந்துவிட்டது) ஷை வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு...... (ஊரின் பெயர் சிதைந்துவிட்டது), நல்லூர் புதுக்குடி, வழகூர், அக்கரூர்; ஷை வளநாட்டு விளைநாட்டு விளைநகராகிய நித்தவிநோத சதுர்வேதி மங்கலம், பெருமுளை, பறியலூர்; ஷை வளநாட்டு ஆக்கூர் நாட்டு இராசேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலம், திருக்கடவூர், தலைச் சங்காடு; ஷை வளநாட்டுக் குறும்பூர் நாட்டுக் காயாக்குடி, தளிச்சேரியான பராந்தக சோழ சதுர்வேதி மங்கலம், குறும்பபுறத்தூர், திருவிடைக்கழி;

(4) இராசேந்திர சிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுக் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம், பெரும்புலியூர், ஷை வளநாட்டு, *மிறைக் கூற்றத்து காமரவல்லி, ஷை வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் தொழூர், பராந்தக சதுர்வேதி மங்கலம், ஷை வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஆதனூர், பழைய வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம், அசுகூர்; ஷை வளநாட்டு மிழலை நாட்டு சேய்ஞலூர், ஷை வளநாட்டு மண்ணி நாட்டு [1]ஏமநல்லூராகிய திரை லோக்கிய மாதேவி சதுர்வேதி மங்கலம், இடையர் நல்லூர், இடவை ஷை வளநாட்டு நல்லாற்றூர்நாட்டு கதவாய் மங்கலம், மகேந்திர கோட்டூர்; ஷை வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கை, காவிரி மங்கலம், கடலங்குடி; ஷை வளநாட்டு........... (நாடு உதிர்ந்துபோய்விட்டது) [2] திரு நன்றியூர், [3] மாற்பிடுகு சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு வெண்ணையூர் நாட்டுப் பெருங்கண்பூர், பாப்பாக்குடி; ஷை வளநாட்டுத் திருக்கழுமலநாட்டுக் கழுமலம், தேனூர்; ஷை வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர், குன்றம்; ஷை வளநாட்டுக்கொண்ட நாட்டுப் பஞ்சவன் மாதேவி சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு நெலுவூர் நாட்டுக் குமராதித்த சதுர்வேதி மங்கலம்; ஷைவளநாட்டுப் பிடவூர் நாட்டு நயத்திரமங்கலம், க்ஷத்திரிய சிங்க சதுர்வேதி மங்கலம்;

(5) இராசாசரிய வளநாட்டு வடவழிநாட்டுத் திருவெள்ளறை; ஷை வளநாட்டுக் கலார்க் கூற்றத்துப் பராந்தக சோழ சதுர்வேதி மங்கலம்;

(6) கேரளாந்தக வளநாட்டு, உறையூர்க் கூற்றத்து இராசாசரிய சதுர்வேதி மங்கலம், அறிஞ்சிகை சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு தட்டைக் களநாட்டுக் கற்றளி சதுர்வேதி மங்கலம், ஷை வளநாட்டுச் சூரலூர்க் கூற்றத்துச் சோழ உத்தம சதுர்வேதி மங்கலம்;

(7) பாண்டி குலாசனி வளநாட்டு, விளாநாட்டு மலரியாகிய ஸ்ரீ கண்ட சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு இடையாற்று நாட்டு இடையாற்று சதுர்வேதி மங்கலம், தொண்டவை சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு எயி நாட்டுத் திருப்பேரூர்;

---

* இது கல்வெட்டுக்களில் விறைக்கூற்றம் என்றும் வழங்கப்பெறும்.

1. ஏமநல்லூர்—இது ஒரு வைப்புத்தலம். "எச்சில் இளமர் ஏமாநல்லூர்" என்பது அப்பர் தேவாரம்.
2. இது தேவாரம் பெற்ற தலம். திருநின்றியூர் என்றிருக்கவேண்டும்.
3. இக்காலம் மார்ப்படி என்று வழங்கப்பெறுகின்றது. மாயூரம் ரயில்வே சந்திப்புக்கு வடமேற்கில் சுமார் 1மைல் தூரத்தில் இருக்கின்றது.

(8) நித்த விநோத வளநாட்டு, இராசகேசரி சதுர்வேதிமங்கலம்; ஷி வளநாட்டு ஆலூர்க் கூற்றத்து * இரும்புதலாகிய மனுகுல சூளாமணி சதுர்வேதி மங்கலம், அமுத்திரவல்லி; ஷி வளநாட்டு முடிச் சோணுட்டு ஜனநாத சதுர்வேதி மங்கலம்; ஷி வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் கீழ்ப்பூண்டியாகிய ஒலோகமாதேவி சதுர்வேதி மங்கலம், பூவனூராகிய அவனிகேசரி சதுர்வேதி மங்கலம்,

என்னும் ஊர்களிலுள்ள சபையார்கள் ஆவர்.

இவர்களுக்கு நிசதம் நெல் பதக்கும், ஆண்டுதோறும் காசு நான்கும் கொடுக்கப் பெற்றுவந்தன. இவர்களிலே நிலையாய் தீக்ஷித்தார் பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல் முக்குறுணியும் ஆண்டுதோறும் காசு நான்கும் கொடுக்கப்பெற்றுவந்தன. இவர்கள் பெறும் நெல்லும் காசும் இராசராசேச்சரமுடையாரின் உள்ளூர்ப் பண்டாரத்தே கொடுக்கப்பெற்று வந்தன.

மேற்குறித்த ஊர்ச் சபையார்களில் பராந்தக சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நான்கு மாணிகளையும், வீரநாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையார் பன்னிரண்டு மாணிகளையும் இட்டிருந்தனர். ஏனைய சபையார்களில் சில சபையார் ஒவ்வொரு மாணியையும், சில சபையார் இரண்டு, இரண்டு மாணிகளையும் விட்டிருந்தனர். இவர்களின் தொகை சுமார் நூற்றைம்பது இருக்கலாம். (கல் வெட்டு சிற்சில இடங்களில் உதிர்ந்துவிட்டமையால் சரியான தொகையை எண்ணி எழுத முடியவில்லை).

குறிப்பு:— சதுர்வேதி மங்கலம் என்பது சில சிற்றூர்களைத் தன்கண்கொண்டது. தீக்ஷித்தார் என்பதற்கு "Those who had taken permanent vows?" என்பர் டாக்டர். உல்ஷ்.

மேற்குறித்த பரிசாரகர் என்ற தலைப்பின் கீழ் அடங்கிய பகுதிகளால், சோழமண்டலம், முதலாம் இராசராசன் காலத்தில் வளநாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்த செய்தியும், நாடு, கூற்றங்களுக்கு உட்பட்டிருந்த ஒவ்வொரு ஊரிலும் ஊர்ச்சபை இருந்த செய்தியும் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

கரணத்தார்:— என்பவர் கோயில் கணக்கு எழுதுபவர் (Accountants) ஆவர். இவர்க்கு ஓராட்டைக்கு நெல் இரு நூற்றுக் கலமும், இவர் இடக்கடவ கீழ்க்கணக்கு (Under Accountant) ஒருவர்க்கு ஓராட்டைக்கு நெல் எழுபத்தைங்கலமாக இருவர்க்கு நெல் நூற்றைம்பது கலமும் கொடுக்கப்பெற்று வந்தன. இவர்கள் இந்நெல்லை இராசராசேச்சரமுடையார் நாட்டுப் பண்டாரத்தே பெற்று வந்தனர்.

* இரும்புதல்—இது ஒரு வைப்புத்தலம். இக்காலம் இரும்புதலை என்று வழங்கப் பெற்று வருகின்றது.

முதலாம் இராசராச சோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர், (1) உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத்தோட்டமான மும்மடிசோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், (2) ஷை வளநாட்டு வெண்ணுட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும்; (3) ஷை வளநாட்டுக் குறும்பூர் நாட்டுத் தேவதானம் திருவிடைக் கழி சபையாரும், (4) இராசேந்திர சிங்க வள நாட்டு மிறைக்கூற்றத்து *காமரவல்லி சபையாரும், (5) ஷை வளநாட்டுப் பராந்தக சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், (6) நித்த விநோத வளநாட்டு முடிச்சோணுட்டு, ஜனநாத சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும் ஆவர்.

இச்சபையார்கள், சபைக்கு ஒவ்வொருவராக அறுவரை இட்டிருந்தனர். இங்ஙனம் இடப்பெற்ற ஒவ்வொரு கரணத்தாரும் தங்கள் தங்களுக்குக் கீழ் இரு கரணத்தார்களை அரசன் கட்டளைப்படி நியமித்துக்கொண்டனர். இவர்களுக்குக் கீழ்க் கரணத்தார்கள் எனப் பெயர்.

எனவே தஞ்சை இராசராசேச்சரத்துக்குக் கணக்கு எழுத அறுவரும், அவர்களுக்குக் கீழ் கணக்கு எழுதப் பன்னிருவரும் ஆகப் பதினெண்மர் நியமிக்கப்பெற்றிருந்தனர்.

## திருமெய் காப்பார்களை நியமித்தது.

திருமெய் காப்பார் என்பார் திருக்கோயிலையும் அதிலுள்ள பொருள்களையும் பாதுகாப்பவர் — (Temple watchmen) ஆவர். முதலாம் இராசராச சோழன் கட்டளைப்படி இவர்களைத் தஞ்சை இராசராசேச்சரத்துக்கு இட்டவர்,

(1) அருமொழி தேவ வளநாட்டு, இங்கணுட்டு, விமல சித்த மங்கலம், நெடுமணலாகிய மதனமஞ்சரி சதுர்வேதி மங்கலம், குன்றியூர்; புறங் கரம்பை நாட்டுப் பல்லவன் மகாதேவி சதுர்வேதி மங்கலம், பெரும்பலமருதூர், குறுக்கை; அளநாட்டுக் கீழையிலாகிய பரமேஸ்வரமங்கலம்; செம்பியன் மகாதேவி சதுர்வேதிமங்கலம்; வெண்டாழை வேளூர்க் கூற்றத்துச் சிற்ருமூர்;

(2) க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருநறையூர், அபிமான பூஷண சதுர்வேதி மங்கலம், வண்டாழஞ்சேரி, கூருர், கற்குடி; செற்றூர்க் கூற்றத்துச் செற்றூர், குடவாயில், நாலூர்; இங்கணுட்டு இங்ஙன்; தேவூர் நாட்டு ஆலத்தூர்; அளநாட்டுப் பெருங்கடம்பூர், பாப்பார்குடி, பொருந்தம் பொருந்தை, பட்டினக் கூற்றத்துக் கொட்டாரக்குடி, திருக்கண்ணங்குடி, கள்ளூராகிய சன்னமங்கலம்; மருகல் நாட்டு மருகல், பூதனூர், வைப்பூர், தஞ்சாவூர், திருவாரூர்க் கூற்றத்து ஆடியப்பிமங்கலம்; வேளாநாட்டு

* இது, உடையார்பாளையந் தாலுகாவில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில், காமரசவல்லி என்று வழங்கப்பெற்று வருகின்றது.

ராஜமல்ல சதுர்வேதிமங்கலம், பெரும்போழ், பனையூர் நாட்டுப் புவலோக மாணிக்க சதுர்வேதிமங்கலம்;

(3) உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத் தோட்டமான மும்மடி சோழ சதுர்வேதிமங்கலம்; பாம்புர நாட்டுப் பாம்புரம், கடையக்குடி, நல்லாவூர்; அம்பர் நாட்டு அதியரைய குறும்பல், நல்லழுந்தூர்; மருகல் நாட்டு மருதவூர்; வெண்ணாட்டுத் திருமழலை, வைகலாகிய வானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம், திருநல்லம், கருவிலி, வயலூர்; திரைமூர் நாட்டுச் சாத்தனூர்; திருவழுந்தூர் நாட்டு அக்களூர், அயிற்காடு; விளைநாட்டு விளைநகராகிய நித்த விநோத சதுர்வேதிமங்கலம், பெருமுளை, பறியலூர், திரைமூர்; ஆக்கூர் நாட்டு இராசேந்திரசிம்ஹ சதுர்வேதிமங்கலம், திருக்கடவூர், தலைச்சங்காடு; குறும்பூர் நாட்டுத் தளிச்சேரியான பராக்கிரம சோழ சதுர்வேதிமங்கலம், இறையான்சேரி, திருவிடைக்கழி, நெடுங்காடு;

(4) இராசேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கைநாட்டுக் கண்டராதித்த சதுர்வேதிமங்கலம், பெரும்புலியூர்; மிறைக் கூற்றத்துப் பார்த்திவசேகர சதுர்வேதிமங்கலம்; அண்டாற்றுக் கூற்றத்து கவையாத்தலையாகிய பண்டித சோழ சதுர்வேதிமங்கலம்; இன்னம்பர் நாட்டுப் பழையவானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம், அசுகூர், கொட்டையூர், ஏராகிய மும்மடிசோழ சதுர்வேதிமங்கலம், பராந்தக சதுர்வேதிமங்கலம்; மிழலை நாட்டுச் சேய்ஞலூர்; மண்ணி நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிய மகாதேவி சதுர்வேதிமங்கலம்; வேம்பற்றூராகிய அவநி நாராயண சதுர்வேதிமங்கலம், பனந்தாடி; விளத்தூர் நாட்டுக் காட்டூர், தனியூர் வீரநாராயண சதுர்வேதிமங்கலம்; குறுக்கை நாட்டுக் குறுக்கை, காவிரி மங்கலம், காட்டியார் பிர்மதேயம், வரகூர், கடலங்குடி; திருவாலி நாட்டு மல்லிகுடி, திருவாலி; திரு இந்தளூர் நாட்டுத் திருநன்றியூர் (திருநின்றியூர்) மாற்பிடுகு சதுர்வேதிமங்கலம், கஞ்சாறநகர்; வெண்ணையூர் நாட்டுப் பெருங்கண்பூர், மாதுலவேளூர், வெள்ளூர், சோதியக்குடி; திருக்கழுமலநாட்டு உதையாதித்த சதுர்வேதிமங்கலம், திருக்கழுமலம், தேனூர்; நாங்கூர் நாட்டு நாங்கூர், குன்றம், மருதூர்; அதிகைமங்கை நாட்டுப் பெருந்தோட்டம்; கொண்ட நாட்டுப் பஞ்சவன் மஹாதேவி சதுர்வேதிமங்கலம்; நெலுவூர் நாட்டுக் குமராதித்த சதுர்வேதிமங்கலம், வேசாலிப்பாடி, சயங்கொண்டசோழ சதுர்வேதிமங்கலம், இருங்கொளப்பாடி, வானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம்;

(5) ராஜாசர்ய வளநாட்டு வடவழி நாட்டுத் திருவெள்ளறை; பாய்ச்சில் கூற்றத்துக் கீழ் பாலாற்றுப் பெருமருதூர்;

(6) கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாஸ்ரீய சதுர்வேதிமங்கலம், அறிஞ்சிகை சதுர்வேதிமங்கலம், வயலூர், கருப்பூர்;

(7) கேரளாந்தக வளநாட்டு மீய்கொட்ட நாட்டுத் தண்டலே;

(8) பாண்டி குலாசனி வளநாட்டு, விள நாட்டு உத்தமசீலி சதுர்வேதிமங்கலம், சோழமகாதேவி சதுர்வேதிமங்கலம்;

இடையாற்று நாட்டு இடையாற்றுமங்கலம்;

(9) நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூராகிய பஞ்சவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம்; ஆவூர்க் கூற்றத்து இரும்புதலாகிய மனுகுல சூளாமணி சதுர்வேதிமங்கலம், விளத்தூர்; முடிச்சோணுட்டு ஜனநாத சதுர்வேதிமங்கலம், சிற்றின்வாழாகிய பரமேஸ்வர சதுர்வேதிமங்கலம், வெண்ணிக்கூற்றத்துப் பூவனூராகிய அவனிகேசரி சதுர்வேதிமங்கலம், பெருநங்கை மங்கலம்; பாம்புணிக் கூற்றத்துச் சிற்றம்பர்,

என்னும் ஊரார்கள் ஆவர். இவர்களின் தொகை நூற்று இருபத்தைந்துக்கு மேற்பட்டதாகும். (சில இடங்களில் கல்வெட்டுப் பொறிந்துபோய்விட்டதால் சரியான எண்ணிக்கையை இங்கே குறிப்பிடமுடியவில்லே.) இவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் நூற்றுக்கல நெல் சம்பளம் கொடுக்கப்பெற்றுவந்தது. இவர்களுக்கு இச்சம்பளம் இவர்கள் எந்த ஊரிலிருந்து வந்தார்களோ அந்த ஊர்களிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

## நிலநிவந்தம்.

முதலாம் இராசராசசோழன், தஞ்சை இராசராசேந்திரமுடைய பரமசுவாமிக்கு வேண்டும் நிவந்தங்களுக்கு ஆண்டுதோறும் சற்றேறக் குறைய ஒன்றரை லட்சம் கல நெல் வருவாய் உள்ள நிலங்களைத் தேவதானமாகச் சோழமண்டலத்திலும் புறமண்டலங்களிலும் கொடுத்துள்ளான்.

## நிலம் கொடுக்கப்பட்ட இடங்கள்.

(1) தென் கடுவாயான அருமொழிதேவ வளநாட்டு இங்கணுட்டுப் பாலேயூர், ஆரப்பாழ், கீரன் தேவன்குடி, நாகன்க........ (இவ்வூரின் பெயரில் சில எழுத்துக்கள் சிதைந்துவிட்டன) தண்ணீர்க் குன்றமான ராஜராஜ நல்லூர், உச்சிபாடி, கீழ்வடுகக்குடி, கஞ்சாற நகர், ஊசிக்கண்ணங்குடி; ஆர்வலக் கூற்றத்து வடவிறையான் பள்ளம், திருத்தெங்கூர்;

(2) வட கடுவாயான க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு அரக்கன்குடி, பிடாரசேரி, வேளாநாட்டு மணற்காலப் பள்ளி;

(3) அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டு நெற்குப்பை.

(4) வடகரை இராசேந்திர சிங்கவளநாட்டு இன்னம்பர் நாட்டு, மருத்துவக்குடி, கருப்பூர், திருவாலி நாட்டுத் திருத்தேவன்குடி, குறுவாணியக்குடி;

(5) மழநாடான ராஜாஸ்ரய வளநாட்டுப் பாச்சிற்கூற்றத்து மீய்பலாற்று ஆன்பனூர், பாச்சிற் கூற்றத்து கீழ்பலாற்று சங்கையூர்,

பணமங்கலவன் கரைப்பற்றுச் சாத்தன்குடி; கலார்க் கூற்றத்து மாந் தோட்டம், இறையான்சேரி, வெண்கோன் குடிக்கண்டத்து வெண் கோன்குடி, மாகாணிகுடி, செம்புறைக்கண்டத்து சிறுசெம்புறை, துறையூர்;

(6) நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம் வெண்ணி, பூதமங்கலம், மீதுவேலி, நகரக்காரக் குறிச்சி, வட தாமரை, வெண்ணித் திறப்பான்பள்ளி, அருமொழிதேவ வளநாட்டுத் தக்களூர் நாட்டுநகரம் வேநெல்விடுகு பல்லவபுரம், கொடிமங்கலம், என்னும் ஊர்களாகும்.

மேற்குறித்த ஊர்களில் வெண்ணி, பூதமங்மலம், பூதமங்கலத் துப்பால் மீதுவேலி, நகரக்காரக் குறிச்சி, வடதாமரை, வெண்ணித் திறப்பான்பள்ளி, இவ்வூர்களிலுள்ள நிலங்களுக்கு இவ்வூரார் ஐந்நூற்று நாற்பத்தொருகழஞ்சே மஞ்சாடியும் எட்டுமாபொன்னையும் தக்களூர் நாட்டு வேநெல்விடுகு பல்லபுரத்து நகரத்தார் நூற்றறுபத் தேழுகழஞ்சரையே மூன்றுமாமஞ்சாடியும் இருமாவரை பொன்னையும் ஆர்வலக் கூற்றத்துத் திருத்தெங்கூர் நகரத்தார் இருநூற்றுத் தொண்ணூற்று எழுகழஞ்சே நாலு மஞ்சாடியும் மூன்றுமா முக்காணி பொன்னையும், திருவாலி நாட்டுக் குறுவாணியக்குடி ஊரார் முந்நூற்று நாற்கழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஒன்பதுமாவரை பொன்னையும், காணிக்கடனுகக் கொடுத்தனர்.

ஏனைய ஊரார்கள், மேற்குறித்த சற்றேறக்குறைய ஒன்றரை லட்சம் கல நெல்லை இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளந்துவந்தனர்.

மேற்குறித்த ஊர்களில், ஒவ்வொரு ஊரிலுள்ள மொத்த நிலம், அவைகளில், இன்ன காரணத்திற்காக இறையிலியாக நீக்கப்பட்ட நிலம் இவ்வளவு, எஞ்சிய நிலம் இவ்வளவு, இந்த எஞ்சிய நிலத் துக்குக் கட்டவேண்டிய காணிக்கைக் கடன் இவ்வளவு, என இந்த நிவந்தத்தை உணர்த்தும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்ற செய்திகள் நம்மை மகிழ்ச்சிக்கடலிற் செலுத்துவனவாகும்.

உதாரணமாக,

" இன்னூட்டு ஆரப்பாழ் நாய்வாலமும், மருத்துவப்பேறும், பள்ளியும் உட்பட அளந்தபடி நிலம் நூற்று ஒருபத்து ஒன்றே, அறுமா அரைக்காணிக்கீழ் முக்காலே அரைக்காலின்கீழ் அரையே இரண்டு மாவிலும், ஊர் நத்தமுங் குளங்களும், ஸ்ரீ கோயிலும் ஐயன் கோயிலும் பிடாரி கோயிலும் கழனிக் குளங்களும் பறைச்சேரி நத்தமும், இறையிலி நிலம் மூன்றரையே நான்கு மாக்காணி அரைக் காணி நீக்கி, இறை கட்டின நிலம் நூற்று ஏழரையே இரண்டு மாக்காணிக்கீழ் முக்காலே அரைக்காலின் கீழ் அரையே இரண்டு மாவினுல், இறைகட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால், அளக்கக்கடவ நெல்லுப் பதி னுயிரத்து எழுநூற்று நாற்பத்து ஐங்கலனே இருதூணிப் பதக்கு முன்னுழி" என்னும் கல்வெட்டுப்பகுதி முதலியன இவைகளுக் குச் சான்ருகும்.

[தொடரும்]

# வேந்தனா? வேய்ந்தவனா?

வித்துவான், ஆதி. முருகவேள்,
(முதல்வர், முருகவேள் தமிழ்க் கல்லூரி, தூத்துக்குடி.)

"என்னப்பா, இந்த மாட்டுக் கொட்டத்தை மேஞ்சு தாரயா?" "மேஞ்சு தாரங்க". "எப்போ மேஞ்சுதார?" "உங்கமாடு மேயப் போறதா என்னங்க?" "ஆமா, மேயப்போறதுதான்". "அப்படின்னா, பகல்லே அதுபோய் மேயட்டும். அப்போ இதை நான் மேயிறேன்".

காலைப் பொழுதிலே நானும் நண்பரும் போகின்ற வழி. ஒரு வீட்டின் முன்பு கேட்ட உரையாடல் இஃது. நண்பருக்கு ஒரே சிரிப்பு. ஏனென்று எனக்கு விளங்கவில்லை. கேட்டேன். "என்ன நண்பரே, அங்கு இரண்டு பேர் பேசிக்கொண்டது கேட்கவில்லையா?" என்றார் அவர். "ஆமாம், கேட்டேன்" என்றேன். "என்ன, மாடும் மேயுமாம், அவனும் மேய்வானாமே! அவன் மேயும் வழக்கமும் உண்டா!" என்று கூறி மீண்டும் நகைத்தார். 'நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறும் தமிழும்' (தொல்-மெய்ப்: க. பேரா.) எனவே பேராசிரியர் உரைத்தார்; இங்குத் தமிழர் கூறும் தமிழும் அங்ஙனம் ஆயிற்றுப் போலும் என நினைத்துக்கொண்டேன். என்றாலும், நண்பரை நோக்கி, "இதனையெல்லாம் தவறாகக் கருதலாமா? பேச்சு வழக்கில் எத்தனையோ இருக்கும்", என்று கூறினேன். "தவறாகக் கருதவில்லை. சொல்லில் ஒரு வேடிக்கை!" என்றார் அவரும்.

சொல்லுவான் கருதிய பொருள்தான் நமக்கு வேண்டுவதென்றிருந்தாலும், சொற்கள் பேச்சு வழக்கில் இவ்வாறெல்லாம் திரிந்து வருதலும் இயற்கையே என்றிருந்தாலும், மக்கள் வழக்கினைப் போகிற போக்கிலேயே விட்டுவிட்டால் என்னவாகும்? 'மழை மிகுதியாகப் பெய்யப் பெய்ய ஆற்றிலும் கால்வாயிலும் வெள்ளம் மிகுந்து ஓடத்தான் செய்யும். ஓடுகின்ற வெள்ளம் இருக்கின்ற கரையைத் தன் வேகத்தில் ஆங்காங்கே சில இடங்களில் உடைத்துக் கொண்டும் சிதைத்துக்கொண்டும் செல்லத்தான்செய்யும். இயற்கைதானே'என்று மன்னனும் மக்களும் வாளா இருந்து விடுகின்றனரா? இல்லையே. இருந்தால்? ஊரெல்லாம் பாழ்தான். வெள்ளத்தின் போக்கிற்கு வழியும் வேண்டும். அதே பொழுதில் அது மக்களுக்குக் கேடின்றி நலம்பயக்கும் முறையில் கரையமைப்பும் வேண்டும். நகரங்களின் வீதிகளில் எவ்வளவு நெருக்கடியான, விரைந்த போக்கு வரவு காண்கின்றோம்! அங்கே மறுகு கூடுமிடங்களிலே காவலரும் அவர் வழிச் செல்லும் ஒழுங்கு ஆணையும் இன்றேல் எத்துணை இடர்ப்பாடு நேரும் என்பது சொல்லவும் வேண்டுமோ?

இப்படியேதான், மொழியிலும். மக்களின் நன்மைக்காகவே, மொழி வெள்ளம் செவ்விய முறையில் மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுதற்காகவே, இலக்கிய ஆறுகளும் இலக்கணக் கரையமைப்புக்களும் உள்ளன. பொதுமக்களின் மொழி வேகத்திற்கு அறிஞர் பெருமக்கள் ஒருவகையாக அணைகோலி வைத்த நெறி அஃது. பேச்சு

வழக்கும் மொழியில் இடங்கொண்டதுதான். கல்விக் குறைபாடு, புறக்கணிப்பு, முயற்சிக் குறைவு முதலிய பல காரணங்களால் அது சில சமயம் கரை கடந்து செல்லக்கூடும். அப்படியே முற்றும் செல்ல விட்டிருந்தால்? இருக்கின்ற மொழி இடம் தெரியாது போய்விடுமே! அப்பொழுது மொழிதான் நின்று பயன்படுமாறு யாங்ஙனம்? தமிழென்ற பெயருந்தான் எங்கிருக்கும்? இந்நிலைமை ஆகாது என்பதற்காக அன்றே, நமது 'தொன்மை' யெல்லாம் ஒழிந்து போகாதபடி அதற்குப் பாது'காப்பா'க எத்தனையோ 'இயம்பி' வைத்தான் ஒரு பெருங் கருணை வள்ளல். அவனைத் 'தொல்காப்பியன்' எனப் பாராட்டி, அவன் செய்த அரிய பொருளுரை யெல்லாம் 'தொல்காப்பியம்' என நாம் போற்றி வருதலில் உண்மையில்லையோ?

அவன் வழியில் செல்வோம். தொடக்கத்தில் 'மேய்தல்' இரண்டு இடத்திற் கண்டோம். இரண்டிடத்தும் கருத்தில் தவறில்லை. சொல்லில்தான் மயக்கம். மாடு மேய்தல் என்பது சரி. அவன் மேய்தல் என்பது வியப்பே! சொல்லியவன் கருத்தில் அது மேய்தல் அன்று, வேய்தலேயாம்.

வேய்தல் என்பது மறைத்தல் என்னும் பொருளை யுணர்த்தும். எதிரிகள் தம்மை அறிந்து கொள்ளாதபடி மறைந்து நின்று பகைப் புலத்து ஆனிரையை ஒற்றறிந்து வந்து தம்மவர்க்கு அறிவிக்கும் ஒழுக்கப் பகுதியையும் பகைப்புலத்தவர் தம் ஆனிரையை மறைத்து நின்ற விடத்தினையும் புறத்துறையுள் "வேய்" எனத் தமிழ்நூல் வழங்கினமையால் இப்பொருள் புலப்படும்.

"புடைகெட, ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்"

(தொல். புறத்-3)

என்றமை காண்க. இதனால் அன்றே மறையும் வேதம் எனப்பட்டது.

நான்கு காலை நிறுத்திச் சுற்றி வளைந்தாலும் மேற்கூரையில்லாமல் அங்குக் குடிபுகுந்திருப்பார் யாவர்? வெயில் மழை குளிர் பனி முதலியவற்றால் உண்டாகும் துன்பத்தினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வீட்டின் மேலே யிருந்து ஒன்றால் மறைக்கப் படல் வேண்டும். புல்லும் ஓலையும் இயற்கை யன்னையின் கையிலிருந்து எளிதாகக் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு மேலே பரப்பி மறைத்துக்கொள்கின்றான் மனிதன். இவ்வாறு மறைத்தலின் அஃது வேய்தலாயிற்று. செல்வம் சிறக்கும் பொழுது புல்லும் ஓலையும் செய்த நன்மை போய் மண்ணும் கல்லும் மரமுமாகி அவையும் போய் இரும்பாகிச் சிமிண்டாகி இன்னும் இன்னும் எத்தனையோ காண்கின்றோம். எதுவே யாயினும் பயன் வேய்தலேயாம்.

இந்த வேய்தல் நம் வீட்டுக் கூரையளவிலேயா நின்றது! அன்று அன்று. எங்கெல்லாமோ சென்று மக்களைக் காக்கும் மன்னன் முடிமேலும் சென்றது, குடைமேலும் சென்றது, பெயர் மேலும் சென்றது. அவ்வழியே வானவர் தலைவன் மேலும் சென்றது. மன்னுயிர் காக்கும் வள்ளல் இறைவன் மேலும் சென்றது.

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே', என்ற ஆழ்வார் அருளிச் செயலின்படி மன்னனைக் கண்டால் மற்றவும் நிரம்பும்.

தமிழ்ச் சான்றோர் மன்னனைப் பல பெயரால் வழங்கினர். அவற்றுள் ஒன்று வேந்தன் என்பதாகும். இப்பெயர் தோன்றற்கு முதலாக இருந்தது வேய்தலென அறிகின்றோம்*.

இங்கு ஒரு காட்சி நம் கண்முன்னே வருகிறது. அதோ தெரிகிறது ஒரு வயல். விளைக்கின்ற பயனாகிய பழத்தை நமக்குத் தரும் இடம் ஆதலின் அதனைப் பழனம் எனவும் கூறுகின்றனர் போலும். அங்கு நீர் மிக நிரம்பி நிற்கின்றமையால் பார்ப்பதற்கு அந்தப் பழனம் ஒரு நீர் நிலையோ என நாம் நினைக்கவிருக்கிறது. அடியில் ஒரே சேறு. சேற்றை அள்ளல் எனவும் அழைக்கின்றனர். ஆதலின் இப்போது நாம் காண்பது ஓர் அள்ளற் பழனம் ஆகும். சேறு மிக்கதால் அங்கே ஆம்பல் தழைத்துக் கிடக்கிறது. அது செந்நிறமுடையது. அரக்குப் போன்ற செந்நிறம். ஆதலின் அழகுறத்தான் சொல்லவேண்டும். அரக்காம்பல் என்போம். நீர் நிரம்பிய இடமாதலின் அங்கு நீர்வாழ் பறவைகள் அழகுக்கு அழகு செய்கின்றன. அவற்றுள் குஞ்சுகளும் உண்டு. தாய்ப் புள்ளும் உண்டு. தாய்ப் புள்ளினத்தோடு குஞ்சுகள் குலாவித் திரிகின்றன. எத்தகைய அழகிய இன்பமான காட்சி! இப்பொழுது பாருங்கள், அதோ, அங்கு ஒன்று நிகழ்கின்றது. ஆம்பலின் அரும்புகளெல்லாம் மெதுவாக வாயைத் திறக்கின்றன. முறுக்கு அவிழ்கின்றன. அப்பப்பா! மலர்ந்த காட்சி எப்படியிருக்கின்றது? நீரே தீப்பட்டது போலல்லவா இருக்கின்றது! நீர் 'வெள்ளம்' எனவும் சொல்லப்படும். மலையாளத்தில், அஃதாவது சேரநாட்டுத் "திசை"யில் வழங்கும் "சொல்" இது. நாம் பார்க்கும் இக்காட்சியும் அந்நாட்டிலேயே தான். ஆகவே அந்நாட்டு வழக்கிலேயே சொல்லுவோம். இப்பொழுது வெள்ளம் தீப்பட்டது போலத் தோன்றுகிறது. உண்மையில் தீ இல்லை. நமக்கோ அழகுக் காட்சிதான். ஆனால் அங்கு வாழும் பறவைகட்கோ?

அங்கே பாருங்கள்! தாய்ப் புள்ளினமெல்லாம் ஓடுகின்றன பாருங்கள்! ஏனோ! அச்சம் போலும்! வெள்ளம் உண்மையில் தீப்பட்டது என மயங்கி வெருவின போலும்! தமக்காக அஞ்சவில்லை. ஓடிச்சென்று தம் குஞ்சுகளை ஆவி அணைக்கின்றன. அவற்றிற்கு நம்போன்ற கையில்லை. சிறகுதானே கை. தம் கையாகிய சிறகால் தம் பார்ப்புகளாகிய குஞ்சுகளை அணைத்து ஒளித்து வைத்துக்கொள்கின்றன. இப்போது அத்தீயால் தம் பார்ப்புகளுக்கு எதுவும் துன்பம் நிகழமுடியாது என்பதில் அவைகட்கு அளவிலா மகிழ்ச்சி. அள்ளற் பழனத்தின்கண் அரக்காம்பல் வாய் அவிழ உடன் வெள்ளம்

* வேய்தல் என்பதன் அடி வேய் என்பதும் அதற்கு அடியுண்டென்பதும் அது பற்றிய ஆராய்ச்சியெல்லாமும் இக்கட்டுரையாசிரியனால் எழுதப்பட்டு வரும் தொல்காப்பிய ஆராய்ச்சித் தொகுதிக்கண்ணே காணலாகும்.

தீப்பட்டது என வெரீஇ அங்கிருந்த புள்ளினம் தம் கைச் சிறகால் பார்ப்புகளை ஒடுக்கும் முயற்சியில் உண்டாயது ஒரு சிறு ஆரவாரம். ஆரவாரம் 'கௌவை' எனவும் சொல்லப்படும். இந்த அழகிய கருத் தமைந்த காட்சியும் கௌவையும் அன்றி வேறு எந்தத் துன்ப ஆர வாரமும் இந்த நாட்டில் இல்லை. இத்தகைய நாடு யாருடைய நாடு என அறிய விழைகின்றோம்.

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீ இப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கௌவை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

என விடை தருகின்றது முத்தொள்ளாயிரம். இக்கருத்துறை காட்சியின் பாட்டோவியம் தீட்டிய பைந்தமிழ்ப் புலவரது பெயரினை அறியோமாய் வைத்தது நம் வினைக்குறை! ஆயினும் அவர் வைத்துச் சென்ற செல்வத்தினை நுகர்ந்தின்புறும் வாய்ப்பாயினும் நமக்குக் கிடைத்ததே!

மேலே கண்ட காட்சியில் ஒரு சிறந்த குறிப்பு உணர்கின்றோம். அக் காட்சியினையுடைய நாட்டு மன்னனது குடியோம்பும் தாய்மைத் திறம் தாய்ப் புள்ளின் அருட் செயலில் உணர்த்தப் படுகிறது. உண்மையில் அவனது நாட்டின்கண் குடிமக்கட்கு யாதும் துன்பம் இன்று. ஆயினும் எங்கேனும் யாதாயினும் ஆரவாரம் சிறிது தோன்றினும் மக்கள்பாற்கொண்ட அன்புப் பெருக்கால் 'அவர்க்குத் துன்பம் உண்டாயிற்றுப் போலும்'! என மயங்கி நினைப்பானுதல் வேண்டும். நினைத்த அவ்வளவிலே ஓடிச் சென்று அவரைத் தனது அருட்செயலின் அணைத்துப் பாதுகாப்பானுதல் வேண்டும். துன்பம் அவரை அணுகாதவாறு தனது அருணிழலின் மறைத்துவைப்பா னுதல் வேண்டும்.

இங்ஙனம் தாய்மை யன்பால் தழுவிப் பாதுகாத்துக் கொள்ளுங் குறிப்பால் அன்றோ

"காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி" (புறம்: ரு)

என்ற புலவர் நரிவெரூஉத்தலையாரின் நன்மொழி யெழுந்தது.

"குழவி கொள்வாரிற் குடிபுறந் தந்து" (பதிற்-6-பதிகம்)

என்ற பதிற்றுப்பத்தும் காண்க.

வெயிலின் துன்புற்றூர்க்கு நிழலால் இன்பஞ் செய்வது குடை. மன்னன் முடிமேல் திங்களென விளங்குவது வெண் கொற்றக்குடை. அக்குடைதான் மன்னற்கு வெயில் மறைத்தற்கெனவே கொண்ட தன்று பண்டைத் தமிழகத்தில். குடிகளை எவ்வகைத் துன்பத்தி னின்றும் மன்னன் மறைத்துப் பாதுகாக்கும் குறிப்பிலேயே கொண்ட தென்ப.

"கண்பொர விளங்குமநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ" (புறம்: ருரு)

எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனுர் பாடிய புறப்பாட்டால் இதனை அறியலாம்.

"உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடை" (அகம்: ௨0௪)

"குளிர்வெண் குடைபோன்றிவ், வங்கண் உலகளித்தலான்" (சிலம். 1–3)

"ஏம வெண்குடை" (பெருங்: க. 36 : 104)

என்று இங்ஙனம் வரும் இலக்கியங்கள் தமிழ் மன்னனது குடையுண்மை புலப்படுத்தும்.

இவ்வாறு மன்னனது ஒழுக்கத்து அறிகுறியாகவே குடை கொள்ளப் பட்டமையால் அன்றே, பாடப்பெறும் ஆண் மகனது ஒழுகலாறு கூறும் பாடாண்திணையாகிய புறத்திணை வகையின் துறைகளுள் ஒன்றாக வைத்து

"நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபு" (தொல்–புறத்: ௩௬)

என எமதாசிரியர் வகுத்துரைத்தனர்?

இதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரை வகுத்தவிடத்து, "இங்ஙனம் புனைந்துரைத்தற்கு ஏதுவாயது நிழலாம். என்னை, அந்நிழல் உலகுடன் இயற்றியதாகக் கூறுதல் உடம்பட்டுக் குடிபுறங் காத்தற்குக் குறியாகக் குடை கொண்டேனென்று அக்கொற்றவன் குறிக்கவும் படுதலின்" எனவும்

"குடையும் வாளும் நாள் கோள்" (தொல்–புறத்: ௧௩)

என்னுமிடத்தும் "தன் ஆக்கம் கருதிக் குடிபுறங்காத்து ஓம்பற் கெடுத்த குடை" யெனவும் உரைத்துப் போந்தமையானும் ஈண்டு ஆராயப்பட்ட பொருள் தெற்றெனப் புலனுமன்றே!

இவ்வாறு நாட்டு மக்களை என்றும் துன்பம் அணுகாது அவரை மறைத்துக் கொண்டு நிற்பவனை, "வேய்ந்து" நிற்பவனை, வேந்தன் என்றனர். "வேய்ந்தவன்" என்ற சொல்லே வழக்கில் "வேய்ந்தோன்" எனவும், பின்னர் "வேந்தன்" எனவும் சுருங்கிச் செய்யுளின் கண்ணேயும் நிலைபெற்றது.

இச்சொல்லின் மற்ருேர் சிறப்பும் குறிப்பிடத்தக்கது. மன்னன் குடிமக்கக்களைப் புறங்காத்தலாகிய வேய்தலைச் செய்து நிற்பது ஒரு காலத்தன்றி முக்காலத்துமாகும்.

"முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை,
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து,
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்".
(தொல்–வினை: ௪௩)

என்ற எமதாசிரியர் ஆணையால் மூன்று காலத்தும் உளதாகும் இயல்பையுடைய எல்லாம் பொருளையும் நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய 'செய்யும்' என்னும் சொல்லாற் சொல்லவேண்டும் என்பது பெறப்படும். அவ்வாறெனின் 'வேயுமவன்' எனச் 'செய்யும்' என்ற வாய்பாட்டு வினையாலணையும் பெயராயன்ருே அமைதல்

வேண்டும்? அங்ஙனமன்றி 'வேய்ந்தவன்' என முன்னர்ச்செய்து, கழிந்ததாய பொருணிலைமையுடைய சொல்லாற் சொல்லியதின் உண்மை,

"வாராக் காலத்தும் நிகழ்கா லத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்" (தொல்-வினை: சச)

என்ற மேற்கோளால் உணரப்படும். தமிழகத்து மன்னன் தனது குடிமக்கட்கு யாதும் தீங்கு வருவதாகப் பொய்யாகத் தோன்றினும் கருதிய அளவிலே உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே மிக விரைவில் ஓடிவந்து புறங்காத்து நிற்பான்; அன்றியும் எப்பொழுதுமே அவனது உள்ளம் இவ்வொழுக்கத்தின்கண் மிக விரைவுபட்டதாகவே இருக்கும்; இவ்விரைவுப் பொருளை உணர்த்தி மன்னனது மாட்சியை விளக்கி நிற்பதாக அமைந்தது 'வேய்ந்தவன்' 'வேந்தன்' என்ற செந்தமிழ்ச் சொல்.

மக்கள் வேந்தன் போன்றே தேவரை வேய்ந்து நிற்பவனும் உண்டு. அவனைத் 'தேவர் வேந்தன்' என்றனராதல் வேண்டும் பண்டையோர். அச்சொல் தேவேந்தன் எனச் சுருங்கியும் நிற்கும். 'சிற்றன்னம்' என்றதொரு சொல் சிலரது வழக்கில் 'சித்ரான்னம்' எனவாகிப் பின்னர் 'சித்திரான்னம்' என வழங்கப்படுமாறு போன்று, 'தேவர் வேந்தன்' 'தேவேந்த்ரன்' ஆகிப் பின்னர் 'தேவேந்திரன்' ஆனான் போலும்! அதன்மேல் சொற்புணர்ச்சிப் பிரிவு முறையில் வருமொழி நிலையில் இந்திரனும் ஆனான் போலும்! இம்முறையாலேயே, "வேந்தன் மேய தீம்புனல் உலகம்" (தொல்-அகத்:) என்ற விடத்தும் வேந்தன் இந்திரன் எனக் கொள்ளப்பட்டான் போன்று காணப்படுகின்றது.

என்னவாயினும் ஆக. குடிகளைப் புறங்காப்பான் வேய்ந்து நின்றமையின் மன்னன் வேய்ந்தவன் ஆனான், வேந்தனும் ஆனான். மன்னன் ஒழுக்கம் பலவற்றுள்ளும் சிறந்ததோர் ஒழுக்கத்தைப் புலப்படுத்தி நிற்பது வேந்தன் எனும் சொல். சொற் சுருங்க வுரைக்கும் இயல்பே தம் புலமையியல்பாகக் கொண்ட திருவள்ளுவப் பெருந்தகையாரின் செந்தமிழ்ப் பாவின் இதன் முடிவிடம் காண்கின்றோம்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (குறள்: 549)

என்பது வள்ளுவர் மெய்ம்மொழி.

'கொன்றை வேய்ந்த செல்வனை'க் 'கொன்றை வேந்தன்' எனத் தமிழ் மூதாட்டியார் வழங்கிய சொற்றிறமும் காண்க.

வேய்ந்தவன் மேய்ந்தவன் ஆனான்; மயக்கந்தான். வேய்ந்தவன் வேந்தவன், வேய்ந்தோன் ஆகிப் பின்னர் வேந்தன் ஆனான்; மயக்கம் இன்று. சிந்தித்தால் தெளிவுண்டு.

சென்ற இதழின் தொடர்ச்சி
தமிழர் பண்பாடு 10.

# போரும் அமைதியும்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனுர்.

"உன்னுடைய படைக் கலங்களாகிய இவைகள் மயிற் பீலி சூட்டப்பட்டுள்ளன; மாலைகள் சூட்டப்பட்டிருக்கின்றன; வலிமையுள்ள நல்ல பிடிகளுடன் காணப்படுகின்றன; எண்ணெய் தடவப்பட்டிருக்கின்றன. அப்படியே புத்தம் புதியனவாக நல்ல பாதுகாப்புள்ள பெரிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

"அந்த அதியமானுடைய படைக்கலங்களோ இப்படியில்லை; பகைவரைக் குத்தியதனால் கங்கும் நுனியும் முரிந்துவிட்டன. அவைகள் மீண்டும் செப்பனிடும்பொருட்டுக் கொல்லனுடைய வேலையிடமாகிய சிறிய கொட்டகையிலே எந்நாளும் கிடக்கின்றன.

"செல்வம் இருக்கும்போது, எல்லோர்க்கும் தாராளமாக உணவளிப்பான். இல்லையானல் உள்ளதனைப் பலரோடும் பங்கிட்டு உண்பான். வறியோரை எல்லாம் காப்பாற்றும் தலைவன் அவன். இத்தகைய எமது மன்னனுடைய வேற்படைகள் நான் சொல்லிய நிலையில் இருக்கின்றன"
என்று உரைத்தார்.

இதனல் "நீ போர் செய்து பழகாதவன்; இப்பொழுதுதான் புதிதாகப் படைக்கலங்கள் சேர்த்திருக்கின்ருய்; எமது மன்னனுக்கு எப்பொழுதும் போர்புரிவதே வேலை. அவன் படைக்கலங்கள் பழமையானவை; அன்றியும் அவன் மக்களுடன் கலந்து வாழ்பவன்; அவனுக்குப் பொதுமக்கள் ஆதரவு உண்டு" என்பதை எடுத்துக்காட்டினர் ஔவையார். இதனை,

இவ்வே,
பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்அணிந்து
கடிஉடை வியன் நகரவ்வே,
அவ்வே,
பகைவர்க்குத்திக், கோடுநுதி சிதைந்து,
கொல்துறைக் குற்றுஇலம் மாதோ; என்றும்
உண்டாயின்பதம் கொடுத்து,
இல்ஆயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம்கோமான், வைந்நுதி வேலே.

என்ற பாடலால் காணலாம்.

மேலே எடுத்துக்காட்டியவைகள் சங்க காலத்திலும்—அடிக்கடி போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்திலும்—அதன் கொடுமையை உணர்ந்தவர்கள் இருந்தனர்; போரைத் தடுக்க முயன்றனர்; அமைதியான வாழ்வை விரும்பும் புலவர்களும், அரசர்களும் இருந்தனர்; என்ற உண்மையை உணர்த்துவன.

போர் இல்லாமல் அமைதியுடன் வாழ்வதால்தான் நாட்டுக்கு நன்மையுண்டு; அமைதியை நிலைநாட்டும் மன்னர்களுக்குத்தான் புகழ் உண்டு; போரிலே வென்று வெற்றி வீரர்ப் பட்டம் பெறுவதைவிட அமைதியைக் காப்பதனால்தான் பெரும்புகழ் உண்டு; அழியாத நிலைமையும் உண்டு; என்பது கம்பன் கருத்து. பண்டைத் தமிழர்களின் கருத்தே கம்பன் உள்ளத்திலும் இவ்வெண்ணத்தை உருவாக்கியது என்று உரைக்கலாம்.

யாரொ டும்பகை கொள்ளிலன் என்றபின்
போர்ஒ டுங்கும்; புகழ்ஒடுங் காதுதன்
தார்ஒ டுங்கல்செல் லாது! அது தந்தபின்
வேரொ டுங்கெடல் வேண்டல்உண் டாகுமோ.

வசிட்டன் இராமனுக்கு அரச நீதி கூறும்போது இவ்வாறு கூறியதாகக் கம்பன் பாடுகின்றான்.

"யாரொடும் பகை கொள்ளாமல் சமாதானமாக வாழ முயற்சிப்பதே அரசன் கடமை; இவ்வாறு அரசன் வாழ்கின்றான் என்றபின் அவனுடைய நாட்டிலே போர் தோன்றாது; போர் தோன்றக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் அந்நிலைமை மறைந்து போய்விடும்.

"போரினால்தான் மன்னர்கள் புகழ் பெறமுடியும் என்று சிலர் சொல்லுகின்றனர்; அது உண்மையன்று. போர் மறைந்தாலும், அப்போர் மறைவதற்குக் காரணமாயிருந்த மன்னனுடைய புகழ் மறையாது, குறையாது, வளரும்.

"அந்த மன்னனுடைய சேனைகளின் அளவும் ஆற்றலும் குறையாது; பெருகித்தான் நிற்கும். இந்தத் தன்மை உண்டானபின் அந்த மன்னனும், அரசும் அடியோடு அழிந்து போகவேண்டிய நிலைமையும் ஏற்படாது. அந்த அரசன் நிலைத்த புகழுடன் வாழ்வான். அவனது நாடும் எல்லாச் செல்வங்களையும் பெற்று இனிது வாழும்".

இதுவே மேலே காட்டிய கம்பன் செய்யுளில் காணும் பொருள்.

போரால் தமிழகம் அடைந்த நிலையை நன்றாக அறிந்தவன் கம்பன்; போரால் நாட்டில் ஏற்பட்ட நாசங்களைக் கண்ணாரக்

கண்டவன் கம்பன்; ஆதலால் தான் இத்தகைய அரிய நீதியை வசிட்டன் வாயால் உரைத்தான்.

## போர்க் கொடுமை.

போரின் கொடுமையைப்பற்றி ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த இராமலிங்க அடிகள் தெளிவாகப் பாடியிருக்கின்றார். போரினால் ஏற்படும் இழப்பும் துன்பமும் அவர் உள்ளத்தை உலுக்கிவிட்டன. அவற்றை எண்ணி எண்ணி ஏக்கம் அடைகின்றார். உலகிலேயே போர் இல்லாமல் என்றும் அமைதி நிலவவேண்டும் என்பதே வடலூர்ப் பெரியாரின் கருத்து.

"அரங்கினில் படைகொண்டு உயிர்க்கொலை புரியும்
அறக்கடை யவரினும் கடையேன்

போர்க் களத்திலே கொல்லும் கருவியைக் கையில் ஏந்தி நின்று உயிர்க்கொலை புரிகின்றவர்கள் கடைப்பட்ட மனிதர்கள். அவர்கள் நாட்டை நாசமாக்கும் போர் வெறியர்கள்"; என்று வெறுத்துப் பேசுகின்றார்.

"வீணில் போர்இழை வெறியர்
புகழ்பெறு வெறியென்"

"வீணாகப் போர் புரிகின்றவர்கள், போர் வெறி பிடித்தவர்கள்; புகழ்வெறி பிடித்தவர்கள்; வீணர்கள்" என்று கடிந்து கூறுகிறார்.

"உலகரசு ஆள்வோர்,
உறைமுடி வாள்கொண்டு, ஒருவரை ஒருவர்
உயிர் அறச் செகுத்தனர், எனவே
தரைஉறச் சிறியேன் கேட்டபோதெல்லாம்
தளர்ந்துஉளம் நடுங்கினின்று அயர்ந்தேன்"

என்று பாடுகின்றார். "உலகிலே அரசாளுவோர், உறையிலே கிடந்த வாளை உருவிக்கொண்டு, ஒருவரை ஒருவர் பதைத்து, உயிர்களைக் கொன்று குவித்தனர் என்ற செய்தியை நான் கேட்டபோதெல்லாம் நடுங்கினேன்; என் உள்ளம் தளர்ந்து நடுநடுங்கித் திகைப்படைந்தேன்" என்று போரிலே தமக்குள்ள வெறுப்பைப் புலப்படுத்துகின்றார்.

போரின் கொடுமையைப்பற்றி இவ்வளவு கடுமையாக வெறுத்துக் கூறிய வேறு புலவர்களைக் காண முடியாது. போரி

ஞல் ஏற்படும் பின் விளைவைப்பற்றி வடலூர் வள்ளலார் நன்ருக உணர்ந்தவர்.

உலக மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும்; சாதி, மத, இன, வேறுபாடற்ற சமரச சன்மார்க்கம் உலகம் முழுவதும் பரவ வேண்டும்; என்ற பரந்த நோக்கம் உள்ளவர் இராமலிங்க அடிகள். போர் நிகழ்ந்தால் இத்தகைய ஒற்றுமைக்கு இடமில்லை. உலகம் ஒன்றுபட முடியாது.

போரின் பலன் வறுமைதான்; வறுமையால் மக்கள் ஒழுக்கங்கெடும்; வறுமையால் வாடுவோர்பால் மனிதத் தன்மைகூட மறைந்துவிடும்; தாம் வாழ்ந்தால் போதும் என்னும் தந்நலப் பேயைப் பேணி வளர்ப்பது வறுமைதான். இவ்வுண்மையைச் சிந்தித்துத் தெளிந்தவர் இராமலிங்க அடிகள்; ஆதலால்தான் போரை—போர் செய்வோரை—போர் வெறிபிடித்தவர்களை—அவ்வளவு வன்மையாகக் கண்டித்துப் பாடினர்.

மேலே கூறியவைகளைக்கொண்டு தமிழகத்துச் சான்ருேர்களின் பேரறிவைக் காணலாம். சங்க காலம் முதல் இன்று வரையிலும் போரை வெறுத்து அமைதியை விரும்பும் அறிஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்; என்பதில் ஐயம் இல்லை.

புறநானூறு பதிற்றுப்பத்துப் போன்ற நூல்களைப் பார்த்துவிட்டுத் தமிழர்கள் போர் வெறி பிடித்தவர்கள் என்று கூறுவோர் உண்டு. இது உண்மை அன்று தமிழர்கள் செய்த போர்கள் அறத்தை நிலைநாட்டப் புரிந்த போர்களாகத்தான் இருந்தன. இராமலிங்க அடிகள் பாடுகின்றபடி 'வீணில் போர் இழை வெறியர்' களாகத் தமிழர்கள் இருந்ததில்லை என்பதுதான் உண்மை. அவர்கள் குறிக்கோள் அமைதி, சமாதானம், என்பது உறுதி.

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

## சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு.]

அலைதாடி கோடுடையது ஆவாகும் என ஆவினிலக்கணந் தோன்றக்கூறுவது ஆவின்னதென ஆவினை விளக்குதற் பொருட்டேயாகும். அதுபோலச் சொல்லிலக்கணந் தோன்றக் கூறுவதும் சொல் லின்னதெனச் சொல்லினை விளக்குதற் பொருட்டே யாகும். அதாவது உயர்திணைச் சொல்லிது அஃறிணைச் சொல்லிது ஆண்பாற் சொல்லிது பெண்பாற் சொல்லிது பலர்பாற் சொல்லிது ஒன்றறி சொல்லிது பலவறி சொல்லிது பெயர்ச் சொல்லிது வினைச்சொல்லிது இடைச்சொல்லிது உரிச்சொல்லிது செப்பாக நிற்குஞ் சொல்லிது வினாவாக நிற்குஞ் சொல்லிது வழாநிலைச் சொல்லிது வழுவமைதியாக நிற்குஞ் சொல்லிது என இவ்வாறும் பிறவாறுஞ் சொற்களை யுணர்ந்து வழங்கும்படி அவற்றினை விளக்குதற்பொருட்டேயாகும். ஆதலால் சேனாவரையர், முதலில் "சொல்லுணர்த்தியவெடுத்துக் கொண்டார்" எனவும் "சொல்லையுணர்த்திய வதிகாரம்" எனவும் * 'அச் சொல்லை யாங்ஙன முணர்த்தினாரோ வெனின்'' எனவும் சொற்களை யுணர்த்துவதாக எழுதினர். உரையாசிரியர், "சொல்லிலக்கண முணர்த்தினமையாற் சொல் லதிகார மென்னும் பெயர்த்தாயிற்று" என எழுதினர். இலக்கணங் கூறுது சொற்களை மட்டு மெடுத்துக் கூறுதலும் காணப்படுதலால், சேனாவரையர் "சொல்லதிகாரம்'' என்பதற்குச் "சொல்லையுணர்த்திய அதிகாரமென விரியும்" எனவும் "அச்சொல்லை யாங்ஙன முணர்த்தினாரோவெனின்'' எனவும் "தம்மையே யெடுத்தோதியு மிலக்கணங் கூறியு முணர்த்தினார்" எனவும் எழுதியதே சாலுமென்க.

உரையாசிரியர் "சொல்லதிகாரம்" என்பதற் கெழுதிய உரையும் பொருத்த முடையதெனக் காட்ட இயல்வதாயினும் சேனாவரையருரை போல விளக்க முடையதாக வில்லை யென்க.

தம்மையே யெடுத்துக்கூறி யுணர்த்தல் = சொற்களையிலக்கணத்தாலறியும்படி கூறாமல் வெளிப்பட எடுத்துக்கூறி யறிவித்தல்.

---

* அச்சொல்லை யாங்ஙன முணர்த்தினாரோ வெனின் ........ உணர்த்தினான்'' என் ஒருமை வாய்பாட்டினாற் சேனாவரையர் தொல்காப்பியரை வழங்காராதலால் அது பிழைப்பகுதியாகும் என்க.

இலக்கணங்கூறி யுணர்த்தல்=சொற்களை வெளிப்பட எடுத்துக்கூறி யறிவியாமல் இலக்கணங் கூறி அதன் வாயிலாக அறிவித்தல்.

"ஆடூஉவறிசொல் மகடூஉ வறிசொல்" என முதலில் பெயரளவாக அறியப்பட்ட சொற்களைப் பின்னர் "னஃகானொற்றே யாடூஉவறிசொல்" "ளஃகானொற்றே மகடூஉவறிசொல்" என இலக்கணங்கொண்டறியும்படி செய்தல் இலக்கணங்கூறி அறிவித்தலாகுமென்க.

"அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே" (தொல்-சொல்-பெய. ௬)

என்பதனு லுயர்திணைப்பெயரஃறிணைப்பெயரெனப் பொதுவாக அறிந்தவற்றை, "அவ்வழி, அவனிவனுவனென வரூஉம் பெயரும்......பாலறிவந்த வுயர்திணைப்பெயரே" (தொல்-சொல்-பெய. அ) என்பது முதலிய நூற்பாக்களாற் சொற்களை வெளிப்பட எடுத்துக்கூறி யிவை யுயர்திணைப்பெயர் இவை யஃறிணைப்பெயர் என அறியும்படி செய்தல் "தம்மையே" யெடுத்துக்கூறி யுணர்த்தலாகும்.

இனிச் சொற்களுட் சில முன்னரறியப்படாதிருப்பினும் தம்மியல்பினின்று மாறுபடும் என்பதை யறிவித்தற்காகவோ மற்றையன போல மாறுபடுதலில்லை யென்பதை அறிவித்தற்காகவோ "யாதெவனென்னு மாயிரு கிளவியும் அறியாப்பொருள்வயிற் செறியத்தோன்றும்" (தொல்-சொல்-கிளவி) எனத் தம்மையே எடுத்தோதலும், "வியங்கோ ளெண்ணுப் பெயர் திணைவிரவு வரையார்" (தொல்-சொல்-கிளவி) என்பது முதலியனவற்றால் இலக்கணங்கூறி யறிவித்தலும், "தம்மையே யெடுத்தோதியும் இலக்கணங் கூறியும் உணர்த்தினர்" என்றதற் கிலக்காவனவே யாகுமென்க.

இனி, "செப்பும் வினவும் வழாஅ லோம்பல்"
"சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" (தொல்-சொல்-கிளவி)
என்பன முதலியன வெல்லா மிலக்கணந் தோன்றக்கூறி அவ்வச் சொற்களை விளக்கியனவாகும் என்க.

*சொற்களை, "அவனிவனுவன்" என வெளிப்பட எடுத்துக் கூறி அவை யுயர்திணை யாண்பாற்பொருளை அறிவிக்கு மியல்

* இவ்வாறு கூறுவன எல்லாங் கொள்க.

புடையன எனக் குறிப்பிடுதலும் னஃகானொற்றை யிறுதியிற் கொள்ளுமியல்புடைய சொல் ஆடூஉவினையறிவிக்கு மியல்புடைய தாகும் எனக் கூறுதலும் கற்போர் சொற்களையறிந்து வழங்குதற் பொருட்டேயாகலான், சேனாவரையர் "சொல்லை யுணர்த்திய அதிகாரம்" என எழுதினரென்பது நன்கு புலப்படும் என்க. இயல், இயல்பு, இலக்கணம் என்பன ஒரு பொருளனவேயாகும்.

"கிளவியாக்கமாயிற்று"—'கிளவியாக்கம்' என்னும் பெயருடையதாயிற்று.

இனி, 'சொல்லதிகாரம்' என்பதுபற்றி யெழுதும்போது சொல்லை யுணர்த்திய வெடுத்துக்கொண்டாரதனா லிவ்வதிகாரம் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று" என எழுதியது போல, "கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று" என எழுதியிருப்பி னன்றாமெனில் "கிளவியாக்கமாயிற்று" என்றாலு மப்பொருளே தருதலால் அங்ஙனமெழுதியதும் பொருந்து மென்க.

"கிளவியாக்கமென்னும் பெயர்த்தாயிற்று" என்பதே "கிளவியாக்கமாயிற்று" எனப் பிழைபடத் திருத்தப்பட்ட தென்பாருமுளர்.
நறுங்கு = தவிடு.

உரையாசிரியர் "கிளவியாக்கம்" என்பதற்குச் "சொற்கள் பொருள்கண் மேலாமாறுணர்த்தினமையாற் கிளவியாக்கமென் னும்பெயர்த்து" என விளக்கங் கூறியுள்ளார். அவருரையை நச்சினார்க்கினியரும் நேமிநாத வுரையாசிரியரும் விரித்துரைத் தனர். அவ்வுரை பொருந்துமாயினும் மற்றைய பகுதிகளும் சொற்கள் பொருள்கண் மேலாமாற்றையே விளக்குதலால் அப் பெயரிப்பகுதிக்கு மட்டும் சிறப்பாக அமைவதெப்படி யென வெழும் வினாவிற்கிடங்கொடுத்தலால் "சொற்கண்மேலா மாற்றையுணர்த்தினமையாற் கிளவியாக்க மாயிற்றெனினு மமையும்" எனச் சேனாவரைய ரமைத்தனர் ஒருவாறதனை விளக்கலி னென்க.

"கிளவியாக்கம்" என்னும் பகுதியில் பெரும்பான்மையும் வழுக்களைந்து சொற்களை யாக்கிக்கொள்ளுந் திறமும் சிறுபான்மை அவ்வாறாக்குவதற்கு உதவியாவனவும் கூறப்படுதலால் "வழுக் களைந்து சொற்களை ஆக்கிக்கொண்டமையாற் கிளவியாக்கமா யிற்று' எனச் சேனாவரைய ரெழுதியதே சாலப்பொருந்தும் என்க.

'யாது எவன்' என்பன போல்வன தனி மொழிபற்றி வருவன. "அடை சினை முதலென முறை மூன்று மயங்காமை" (கிளவியாக்கம்) என்பதுபோல்வன தொடர் மொழிபற்றி வருவன வாதலால் "கிளவி யெனவே தனிமொழியுந் தொடர் மொழியுங் கொள்ளப்படும்" என்றனர்.

"கிளவி, சொல், மொழியென்பன ஒரு பொருட்கிளவி" என்பது, "கிளவியாக்கம்" என்னுந் தொடருள் "ஆக்கம்" என்பதற்கு மட்டும் விளக்கங்கூறி, "கிளவி" யென்பதற்கு ஏன் விளக்கங் கூறவில்லை யென்னும் வினவை நோக்கி, முன்னர் "சொல்லதிகாரம்" என்னுந் தொடருள் "சொல்" என்பதற்குக் கூறிய விளக்கமே "கிளவி" யென்பதற்கு மாகு மாதலின் அதற்கென விளக்கங்கூறல் வேண்டுவதில்லை யெனக் குறிப்பிக்கின்றது.

'எனவே' = (முன்னர் எழுத்ததிகாரத்தில் "உயர்திணைப் பெயரே யுயர்திணையாயின்" "அஃறிணை விரவு" என்பன முதலிய நூற்பாக்களில் வரும் *'உயர்திணை அஃறிணை', யென்பன இன்னவென விளங்காது நின்றமையின் அவற்றை யின்னவென விளக்கி, ஆயிருதிணையின்கண்ணுஞ் சொல் நிகழும்) என்றமையால்.

"சொல் லிரண்டென்றவாரும் = (இந்நூற்பாவால் உயர் திணைச் சொல் அஃறிணைச் சொல்லெனச்) சொல்லையே வகுத்துக் கூறியபடியாம். (பொருளை வகுத்துக் கூறுதலி னோக்க மில்லையென்றபடி.)

இது "பொருளையும் சொல்லையும் வகுத்துக் கூறுகின்றது இந்நூற்பா" என்னு முரையாசிரியருரையைப் பின்னர் மறுப்பதற்காக, முன்னர்த் தன் கொள்கையைக் குறிப்பிக்க எழுதிய வுரையாகும்.

திணை யென்பது "திணைநிலன்குல னொழுக்கம்" எனப் பல பொருளில் வருவதற் குரியதாகக் காணப்படலா லீண்டு அது சாதிமேல் வந்ததென்பதும் அது பொருள்களைப் பற்றி நிகழும் பொழுது பொருள்களிலுள்ள உயர்ந்த பண்புகளாலும் இழிந்த பண்புகளாலும் உயர்ந்தது இழிந்த தெனப்படுமன்றி அதற்கு வளர்தலுங் குறைதலுமாகிய செயலின்மையால் அவைபற்றி உயர்ந்தது இழிந்ததெனப் புகல ஏலாதாகலான் "உயர்திணை" யென்புழி அத்தொகை பண்புத்தொகை யாகுமன்றி வினைத் தொகை யாகாதென்பதும் போதர "மக்கட்சாதி சிறந்தமையான் உயர்திணை யென்றார்" என்றனர். (தொடரும்)

* உயர்திணை யென்பது உயர்வாகிய சாதியையுடைய பொருண்மேனிற்றலால் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தன் மொழித் தொகையாய் மக்களெனக் கருதப்படும் பொருளை யுணர்த்திற்றென்க.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# அந்தாதி இலக்கியம்.

## திரு. அடிகளாசிரியர்.

இந்தக் காலத்திலே பலர் கவிதை இயற்ற வேண்டுமென்றும் காவியம் பாட வேண்டுமென்றும் பேராசைப்படுகின்றனர். ஆனல், பாட்டியற்றவேண்டிய இலக்கணங்களை அவர் சிறிதும் பயில்வதில்லை. எந்தப்பாட்டிற்கு எந்தச்சீர் வரவேண்டும் எந்தத் தளை அமையவேண்டும் என்று கருதாமல் வாயிலே வந்தவாறு பாட்டினை இயற்றுகின்றனர். இலக்கணங் கற்ற புலவர் இப் பாட்டுக்களைக் கண்டால் அருவருத்து ஒதுக்குகின்றனர். இந்தச் செய்தியை உவமையாக வைத்துக்கொண்டு மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என்பார் தாம்பாடிய 'பழனி வெண்பா அந்தாதி' யில் கூறுகிறார்; "தென்னாட்டில் உள்ள பழனி மலைக்குத் தலைவனான முருகனே! சீருந்தளையுங் குன்றிய செய்யுள் உலகத்தவரால் இகழப்படுவதைப்போல யான் இவ்வுலகத்தவரால் இகழப் படுவேனே? உன்னை நேரிலே காணும் தன்மையிலே என்னை வைத்து, வறுமையும், நோயும், மனத்துன்பமும் விலக்கி எனக்குப் பல நன்மைகளை உண்டாக்கி உண்மைப் பொருளை அறிவுறுத்துவாயாக" என்று முருகனிடம் வேண்டுகின்றார்.

"சீர்தளை குன் றுங்கவிபோல் தென்பழனி அப்பாநான்
பார்தனில்நிந் திக்கப் படுவேனே—நேர்தழுவும்
தன்மையில்வைத் தின்மைபிணி சஞ்சலமெல் லாம்விளக்கி
நன்மைவிளைத் துண்மைநிலை நாட்டு".

(பழனி வெண்பா அந்தாதி—16)

கன்னட நாட்டிலிருந்து நமசிவாயர் என்னும் வீரசைவத் துறவி தமிழ்நாட்டிலுள்ள திருவண்ணாமலைக்கு வந்து மலையின் மேலுள்ள குகையில் சிவயோகம் செய்துவந்தார். அவர் குகையில் வாழ்ந்து வந்ததால் குகைநமசிவாயர் என்று அழைக்கப்பெற்றனர். அவர் கன்னடியராயிருந்தும் செந்தமிழை நன்கு பயின்று சிறந்த புலமையடைந்தார். தமிழிலே அருணகிரி அந்தாதி முதலான இலக்கியங்களை எல்லாம் இயற்றியருளினர். அவ்வந்தாதியுள் மூவர் பாடிய தேவாரப்பாட்டின் பண்களைக் கீழ் வருமாறு புகழ்ந்து பேசியுள்ளார்.

"அண்ணாமலையாரின் அடியாராகிய திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார், திருஞானசம்பந்தர் என்னும் மூவர் பாட்டின் பண்களைக் கேட்ட மேன்மையாலே வலிய நீர்ப்பெருக்கிலே கருங்கல் தெப்பமாய் மிதக்கும்—(அப்பர்).

கிடைத்ததையெல்லாம் விழுங்கும் முதலையின் வாய் தான் உண்ட பிள்ளையைக் கக்கும்.—(சுந்தரர்) எலும்பானது அழகிய வடிவத்தை யுடைய பெண்ணாதும்—(சம்பந்தர்).

மூவரின் தேவாரப் பண்களைக் கேட்ட மேன்மையாலே அறிவற்ற பொருள்களே இத்தகைய நிலைமையை அடைந்தால் அறிவுடைய யான் கேட்டால் எப்பேறு பெறமாட்டேன்" என்று மூவர் தமிழைப் பாராட்டுகின்றார்.

"வன்பெருக்கில் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரும்
என்புருக்கொள் பெண்ணு யிருக்குமே—அன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம்".

நம்மாழ்வார் தாம் பாடிய பெரிய திருவந்தாதி இரண்டாஞ் செய்யுளில் மக்களின் இயல்பை நன்றாய்க் கூறியுள்ளார்.

"எங்கள் திருமாலே! மக்களாகிய யாங்கள் ஒரு காலத்தில் ஒன்றைவானளாவப் புகழ்ந்து பேசுவோம்; மற்றொரு காலத்திலே அதனையே புகழாமலு மிருப்போம்; ஒரு காலத்தில் ஒன்றை மிகவும் பழித்துப் பேசுவோம்; மற்றொரு காலத்தில் அதனையே பழியாமலு மிருப்போம்; ஒரு காலத்தில் ஒன்றை இகழ்வாகக் கருதுவோம்; மற்றொரு காலத்திலே அதனையே இகழ்வாய்க் கருதாமலு மிருப்போம்; ஒரு காலத்தில் ஒன்றைச் சிறந்ததாகக் கருதுவோம்; மற்றொரு காலத்தில் அதனையே மதியாமலுமிருப் போம். இவ்வாறு ஒரு நிலையிலே நில்லாமல் பலவகையாக யாங்கள் பேசுவதற்குக் காரணம் என்ன? ஒன்றின் உண்மை நிலையை உள்ளது உள்ளபடி அறிந்துகொள்ளும் தெளிவு எங்களிடம் இல்லையே. எங்கள் தீவினையால் மனம் மயக்கமடைந்துள்ளது. இறைவனே! இதற்காக எங்களைச் சினந்துகொள்ளாதே" என்று கூறுகின்றார்.

"புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்
இகழ்வோம் மதிப்போம் மதியோம்—இகழோம்மற்
றெங்கண்மால் செங்கண்மால் சீறல்நீ தீவினையோம்
எங்கண்மால் கண்டா இவை".

[தொடரும்]